★ காஞ்சிபுரம்
★ பெனாரிஸ்
★ கெவி தஞ்சூர்
★ பாட்லி
★ பட்டுவேஷ்டிகள்
மற்றும் சகலவிதமான
பிளஸ்வ் பீஸ் வகைகளுக்கும்
ராசி சில்க்ஸ்
நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

LIBRARIAN
PUBLIC LIBRARY
JAFFNA

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

மங்கள வைபவங்களுக் கேற்ப உடுபுடவைகள்
ராசி சில்க்ஸ்
நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

சுடர் 5: சுக்கில ஹூ பங்குனி மீ 24 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1410 றமழான் பிறை 9 (06-04-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 53

## வடக்கு, கிழக்கு

# மாகாணசபையை கலைக்க

# அரசாங்கம் அவசரப்படாது!

### அரசமைப்புப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் ரஞ்சன்

கொழும்பு, ஏப்ரல் 6

வடக்கு, கிழக்கு மாகாணசபையைக் கலைப்பதில் அரசாங்கம் அவசரம் காட்டாது.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயத்தில் அரசமைப்புப்படி ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா உரிய நடவடிக்கைகளை -எடுப்பார்.

அமைச்சரவைக் கூட்டம் தொடர்பான தகவல்களை வெளியிடுவதற்காக நேற்றுக் கூட்டப்பட்ட விசேட செய்தியாளர் மாநாட்டில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர்ரஞ்சன்விஜேரத்னா இப்படிக் கூறினார்.

வடக்கு - கிழக்கு மாகாண சபை இயங்கா விட்டாலும் அங்கு உள்ளூராட்சி நிர்வாகம் சீராக இயங்கிவருகிறது.

வடக்கு, கிழக்கு மாகாண சபையின் நிலைகுறித்து ஜனாதிபதி வெகு கவனமாக ஆராய்ந்து வருகிறார்.

— இவ்வாறு அமைச்சர் மேலும் கூறினார். (அ-உ-எ)

### இன்று ஒய்வூதியம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

ஒய்வூதியம் பெறுவோருக்கான வவுச்சர்கள் நேற்று அனுப்பி வைக்கப்பட்டன. இன்று வங்கிகளில் ஒய்வூதியம் பெறலாம்.

புதுவருடத்தையொட்டி ஒய்வூதியம் முன்கூட்டியே வழங்கப்படுகிறது.

வங்கிகளுக்கு நேற்று வவுச்சர்களும், பணமும் அனுப்பப்பட்டன என்று செயலக அதிகாரி தெரிவித்தார். (இ-3)

### முச்சந்தி முரளி



சலுகையிலைவந்தததுதானே சலுகையாய் வித்து விடுவம் எண்டு யோசிச்சுச் செய்திட்டினம் போலை மக்கள் தலைவர்கள் . . . !

# தமிழக மீனவர்களை புலிகள் தடுத்ததை ரஞ்சன் வரவேற்கிறார்

கொழும்பு, ஏப்ரல் 6

இலங்கையின் கடற் பிராந்தியத்துக்குள் அத்துமீறி மீன் பிடித்த இந்திய மீனவர்களை விடுதலைப் புலிகள் தடுத்து வைத்த செயலை பெருந்தோட்டத் தொழிற்றுறை அமைச்சரும், பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்னா வரவேற்றார்.

நேற்று நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்பு நேரத்தில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இப்படித் தெரிவித்தார்.

**நாடாளுமன்றத்தில் நேற்று நடந்தவை**

நேற்று நாடாளுமன்றத்தில் ஸ்ரீ. ல. சு. கட்சி எம் பிக்கள் சரமாரியாகக் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்கு, அமைச்சர் ரஞ்சன் திணறியதைக் காணக்கூடியதாகவிருந்தது.

## விடுதலை புலிகள்பற்றி அடுத்தடுத்துகேள்வி

சபை ஒத்திவைப்பு வேளையின் போது ஸ்ரீ. ல. சு. கட்சி எம். பி திரு. ஸி. வி. குணரட்ண விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் குறித்து அடுத்தடுத்துப் பல கேள்விகளை எழுப்பினார்.

வடக்கு, கிழக்கில் பொலிஸ் பாதுகாப்பு நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகளின் தலையீடு, சிங்களக் குடியேற்றவிவகாரம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்த கருத்துக்கள், விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படும் வரி வசூல் மற்றும் வடக்கு,கிழக்கு மாகாண முதல்வர் திரு. வரதராஜப் பெருமாளின் நிலை ஆகியவை குறித்து பல்வேறுகேள்விகளை திரு.குணரத்ன எழுப்பினார்.

அந்தக் கேள்விகளுக்கு பதிலளிக்க அமைச்சர் ரஞ்சன் முயன்றார்.

விடுதலைப்புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைவது தொடர்பாக அரசாங்கம் இன்னும் ஒரு முடிவும் எடுக்கவில்லை. நிலைமையைப் பரிசீலித்து வருகிறோம். விடுதலைப் புலிகளுடனும் பேசி வருகிறோம்.

இந்திய மீனவர்களைத் தடுத்து வைக்க விடுதலைப் புலிகளுக்கு அங்கீகாரம் இல்லை என்பது உண்மை தான். ஆனாலும் எமது பாரம்பரிய பிரதேசத்தில் அவர்கள் அத்துமீறி மீன் பிடித்தபோது அதைத் தடுப்பதற்காக விடுதலைப் புலிகள் அவர்களைத் தடுத்து வைத்தார்கள் இதனை நான் வரவேற்கிறேன்.

மீனவர்களை தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி விடுவிக்கவில்லை.

கருணாநிதி எங்களுடன் தொடர்பு கொண்டார். நாங்கள் கேட்டுக்கொண்டதால் தான் விடுதலைப் புலிகள் அவர்களை விடுவித்தார்கள் -- என்றார்.

## சபையில் குறுக்கீடும் குழப்பமும்!

அப்போது சபையில் பலத்த குறுக்கீடுகள் இடம் பெற்றன.

ரஞ்சன்:- விடுதலைப் புலிகளை அடக்குவதற்கு எங்களுக்குத் 'துணிச்சல்' இருக்கிறது — என்றார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஸ்ரீ. ல. சு. கட்சி எம். பிக்களான திரு. ஸி. வி. குணரட்ணவும், திரு. நிமால் டி சில்வாவும் தொடர்ந்து குறுக்கிட்டு பல கேள்விகளை எழுப்பினர்.

ரஞ்சன்:- எங்களுக்கு மாத செலும்பு இருக்கிறது. பிரச்சினையை நாம் விரும்பியவிதத்தில் தீர்த்துக்கொள்வோம். உங்கள் குறுக்குக் கேள்விகள் எல்லாம் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உள்ள நட்புறவை முறிக்கும் நோக்கம் கொண்டவை.

எமக்கு வேண்டிய விதத்தில் பிரச்சினையைத் தீர்ப்போம். இதில் வீணாகத் தலையிட்டு எதிர்க்கட்சிகள் பிரச்சினையை மேலும் வளர்க்கத்தேவையில்லை.

## துணிச்சல் இருந்தால் வடக்கே சென்று சண்டை இடுங்கள்

இங்கு வீணாகக் கேள்வி எழுப்புவதை விடுத்து துணிச்சலிருந்தால் வடக்கிற்கு நீங்கள் சென்று சண்டையிடலாம்.

இங்கு நீங்கள் பாதுகாப்பாக இருப்பதே எமது பாதுகாப்பினால் தான்.

— இவ்வாறு திரு ரஞ்சன் கூறியபோது மீண்டும் சபையில் கூச்சலும், குழப்பமும் ஏற்பட்டது.

அதைத் தொடர்ந்து, முதலில் கிளப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லுவதற்கு கால அவகாசம் கோரி விட்டு சபையை விட்டு வெளியேறினார் (உ-2)

# புலிகள் வைத்திருக்கும் ஆயுதங்கள்

# அரசுக்கு விவரம் ஏதும் தெரியாது!

### அமைச்சர் ரஞ்சன் வெளியிட்ட தகவல்

கொழும்பு, ஏப்ரல் 6

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருக்கும் ஆயுதங்கள் குறித்து அரசாங்கத்துக்கு விவரம் எதுவும் தெரியாது.

இவ்வாறு தெரிவித்தார் பாதுகாப்புத் துணை அமைச்சர் திரு. ரஞ்சன்விஜேரத்னா.

புதிய அமைச்சரவையின் முதலாவது கூட்டம் நடைபெற்றது. அதன் பின்னர் பத்திரிகையாளர் மாநாடு நடந்தது. அங்கு செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் முன்கண்டவாறு சொன்னார்.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களை வைத்திருக்கிறார்களே அவைபற்றிய விவரங்கள் அரசுக்குத் தெரியுமா என்று செய்தியாளர் ஒருவர் கேட்டார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர்—

வெளிப்படையாகச் சொல்வதானால் விவரம் எதுவும் தெரியாது-என்றார்.

செய்தியாளர்கள் கேட்ட ஏனைய கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அவர் கூறியதாவது:-

★ இரண்டுவகைச் சட்டங்கள் நாட்டில் இருக்க முடியாது.

சட்டத்தை மீறி எவரும் நடக்க முடியாது. பொலீஸாரும் இராணுவத்தினரும் மட்டுமே ஆயுதங்களை வைத்தி

(5 ஆம் பக்கம் பார்க்க)

**ஷப்றா-உதயன் அனுசரணையுடன்**

## யாழ். பஸ் நிலையத்தில் போக்குவரத்து தின விழா

### ஜி.சி.ஈ. சாதனையாளருக்கும் பரிசு

யாழ்ப்பாணம் ஏப்ரல் 6

தேசிய போக்குவரத்து தினத்தையொட்டி, ''ஷப்றா—உதயன்'' நிறுவனங்களின் அனுசரணையுடன் மாபெரும் கலைவிழாவும், பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 12 ஆம் திகதி மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய பஸ்நிலையத்தில் வடபிராந்திய போக்குவரத்துச் சபையால் நடத்தப்படவிருக்கிறது.

இந்த விழாவில் வடபிராந்தியத்தில் உள்ள ஏழு டிப்போக்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சிறந்த சாரதி, சிறந்த நடத்துனர், சிறந்த தொழில் நுட்பவியலாளர் ஆகியோருக்கும்—

1989 இல் நடைபெற்று அண்மையில் முடிவுகள் வெளிவந்த ஜி.சி.ஈஉயர்தரபரீட்சையில்4 'ஏ' பெற்ற 14 மாணவர்களுக்கும்— பரிசில்கள் வழங்கப்படும்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. சி. கனகரெத்தினம் இத்தகவலைத் தெரிவித்தார்.

விசேட சொற் பொழிவுகளும், கலை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம் பெறவிருக்கின்றன. [அ-3]

**பயிலுநர் ஆசிரியர் நியமனம்:**

## முறைகேடு பற்றிய புகார்கள் குழு ஒன்றால் விசாரிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஏப் 6

யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற பயிலுநர் ஆசிரியர் நியமனத்தில் முறைகேடுகள் ஏற்பட்டிருந்தால் ஐவர் கொண்ட குழு மூலம் இது தீர்க்கப்படும்.

இப்படிக் கூறினார் யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம்.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நியமனத்தில் முறைகேடுகள் இருப்பதாக புகார்

(5ம் பக்கம் பார்க்க)

## 2 ஆம் தொகுதி நகைகள் நேற்று வந்து சேர்ந்தன

### இன்றும் நாளையும் மீளளிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

யாழ் மாவட்டத்துக்கு வழங்கவேண்டிய இரண்டாவது தொகுதி 1749 நகைகள் நேற்று வந்து சேர்ந்தன. இன்றும், நாளையும் நகைகள் மீளளிக்கப்படும்.

ஸ்ரான்லி வீதிக்கிளையில் அடகு வைத்து 15 - 10 - 89 வரை பணம் செலுத்தியவர்களின் 595 நகைகள் 6ஆம், 7 ஆம் திகதிகளிலும் —

நவீனசந்தை, சாவகச்சேரி, பளை ஆகிய கிளைகளில் அடகுவைத்து 15 - 10 - 89 வரை பணம் செலுத்தியவர்களின் 509 நகைகள் 6 ஆம் திகதியும் —

பிரதான வீதி, புங்குடுதீவு, கன்னாதிட்டி, சங்கானை ஆகிய கிளைகளில் அடகுவைத்து 12 - 10 - 89 வரை பணம் செலுத்தியவர்களின் 645 நகைகள் 7 ஆம் திகதியும் — யாழ் பொலீஸ் நிலையக் கட்டடத்தில் வைத்து மீளளிக்கப்படும் என்று மக்கள் வங்கி அதிகாரி திரு. எஸ். சிவசிதம்பரம் தெரிவித்தார். (இ-3)

### சுப நேரம்

06-04-1990

வெள்ளிக்கிழமை பங்குனி 24

சுபநேரம்:

06-08முதல் 07-38 வரை

இராகுகாலம்

10 -38 முதல்12-08 வரை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

## எம். பிமாரின் வாகனங்கள் வெளியாருக்கு விற்பனை!

### தேடிக் கண்டுபிடிக்க உத்தரவு

கொழும்பு, ஏப். 6

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குச் சலுகை அடிப்படையில் வழங்கப்பட்ட வாகனங்கள் சில விற்கப்பட்டிருப்பதாக முறைப்பாடு வந்துள்ளதாக ஜனாதிபதி திரு.பிரேமதாஸா நேற்று முன்தினம் அமைச்சரவையில் தெரிவித்தார்.

எம். பிக்களுக்கு வழங்கப்பட்ட வாகனங்களை எம். பிக்கள் அல்லாத எவரும் வாங்கி வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும் என்று அமைச்சரவையில் தெரிவிக்கப்பட்டது

இத்தகவலை நேற்று செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்ட அமைச்சரவைப் பேச்சாளர் ரஞ்சன் விஜேரத்ன 'அப்படி விற்கப்பட்ட வாகனங்களைத் தேடிக் கண்டுபிடிக்கும்படி அரசு உத்தரவிட்டிருப்பதாகத் தெரிவித்தார். (ஒ-எ)

### எரிபொருள் இல்லை

யாழ்ப்பாணம், ஏப் 6

யாழ்ப்பாணத்துக்கு நேற்றும் எரிபொருள் வந்து சேரவில்லை.

எரிபொருளை எடுத்துவர ரயில் எஞ்சின் சாரதிகள் இல்லாததே எரிபொருள் வராததற்கு காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று யாழ்ப்பாண எரிபொருள்நிலையங்களில் பெற்றோல் டீசலுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவியது. (இ-5)

### உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஏப் 6

அன்னை பூபதி நினைவாக யாழ் ஓட்டுமடம் சந்திக்குச் சமீபமாக நேற்று உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப் பட்டது.

உண்ணாவிரதத்தில் பெண்கள் சிறுவர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதே வேளை யாழ் ராணி இயேட்டருக்கு முன்பாக அன்னை பூபதி நினைவாக நேற்று பொதுக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. (ஒ-9)

### நோன்பு திறக்கும் நேரம்

6 - 4 - 90

ஸஹர் முடிவு -4 - 32

நோன்பு திறக்கும் நேரம் - 6 -21

## மக்கள் கருத்தை கேட்கிறார் புலிகளின் யாழ் தளபதி

யாழ்ப்பாணம், ஏப் 6

பொதுமக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களைத் தாங்கள் எதிர்பார்ப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்டத் தளபதி திரு. பானு தெரிவித்திருக்கிறார்.

இதுதொடர்பாக பொது இடங்களில் வைக்கப்பட்டிருக்கும் அபிப்பிராயப் பெட்டிகளில், பொதுமக்கள் தங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களைப் போடுமாறு அவர் கேட்டிருக்கிறார்.

பொதுமக்கள் அச்சமின்றித் தங்கள் கருத்துக்களை விடுதலைப் புலிகளுக்குத் தெரிவிக்கலாம் என்றும் அவர் சொன்னார். (உ)

## தமிழீழ பண்பாட்டை பேணவும் நிதர்சனம் பணிபுரியும்

### ஆலோசனைக் கூட்டத்தில் தகவல்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

எமது சமுதாயத்தினருக்கு விடுதலை உணர்வை ஊட்டி வளர்த்தெடுப்பதற்காகவே நாம் முன்னர் நிதர்சனம் தொலைக்காட்சி சேவையை நடத்தினோம். ஆனால்இன்று இன்று இந்தசேவை விடுதலை உணர்வையும் தமிழீழத்தின் கலாசாரத்தையும் பண்பாட்டையும் பேணி வளர்த்தெடுப்பதற்காகவே ஆரம்பிக்கப்படுகிறது.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## பயிலுநர் ஆசிரியருக்கு பண்டிகைமுற்பணம்இல்லை!

### நாடாளுமன்றில் லலித் தகவல்

கொழும்பு, ஏப்ரல் 6

பயிலுநர் ஆசிரியர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட 25 ஆயிரம் பேருக்கும் மற்றும் வெளிவாரிப் பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெற்ற 3 ஆயிரம் ஆசிரியர்களுக்கும் புத்தாண்டுமுற்பணமாக கொடுப்பனவு ஏதும் வழங்கப்படமாட்டாது.

இவர்களுக்கு வழங்கப்பட்ட நியமனம் நிரந்தரமாக்கப்படவில்லை. அவர்கள் தற்காலிக ஊழியர்களோ, அமைய ஊழியர்களோ அல்லர் பயிற்சியாளர்களாகவே அவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இலந்தைக் குளம் வீதி அம்மன் கோவிலிற்கு அண்மையில் சகலவசதிகளுங்கொண்ட 2¼ பரப்புக் காணியுடன் வீடும் விற்பனைக்குண்டு. விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம். தொடர்பு இ. வசந்தகுமார், 79 ஆனந்தன் வடலி றோட், அரியாலை யாழ்ப்பாணம். (C/4427)

நல்ல நிலையில் உள்ள லான்சர் C 90 விற்பனைக்கு உண்டு. தொடர்பு: G. அன்ரனிராஜா 34, புங்கன்குளம் றோட், யாழ்ப்பாணம். (12278)

CD 125 T Benly 1987 Model விற்பனைக்குண்டு. தொடர்பு Dr. Rajeswaran Palaly Road, Thirunellvely North, Jaffna. காலை 10 மணிமுதல் 12 மணி வரை பார்வையிடலாம். (3217)

நல்ல நிலையில் உள்ள டிப்பிரீசர் உடன் விற்பனைக்குண்டு 46, 4 ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம். (3218)

பூரண விளைத் திறனுடைய பம்பாய் வெண்காய விதை ரம்பூர் சிகப்பு ரகம் விற்பனைக்கு உண்டு. கிலோ 375 ரூபா பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3215)

### தேவை

தமிழ் அச்சுக்கோர்ப்பாளர்கள் (கொம்பஸிற்றேர்ஸ்) தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். நேரில் வரவும். செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம். (C/4232)

கடைச்சல் இயந்திர சக் [Lathe Chuck] தேவை. ஓமேகா, மானிப்பாய், வீதி, யாழ்ப்பாணம். (3221)

யாழ் மாநகர சபைக்குள் வசிப்பவரும் ஆங்கிலத் தட்டெழுத்தில் அனுபவம்(ENGLISH TYPING) உள்ளவருமான பெண் காசாளர் தேவை. உடன் தமது சொந்தக் கையெழுத்தில் ஆங்கிலத்தில் விண்ணப்பிக்கவும். GLOBE, INDUSTRIES 173, 4TH CROSS STREET, JAFF-NA. (12279)

### ரைப்பிங் சேவை

தமிழ், ஆங்கிலம், ரைப்பிங் மற்றும் Stencils cutting குறைந்த செலவில் ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். நாடுங்கள்: FUDO 39/17, மின்சார நிலையவீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி/4206]

### விற்பனையாளர் தேவை

O/L கணிதம் A/L கணக்கியல் பாடங்களில் சித்தியடைந்த மாநகரசபை எல்லைக்குள் வசிக்கும் பெண் பிள்ளைகள் தேவை. எதிர்பார்க்கும் சம்பளத்துடன் விண்ணப்பிக்கவும். No. 669, C/o உதயன். C/4226)

### புத்தகங்கள்

முத்து, லயன், ராணி, இதில் வெளியீடுகளின் சித்திரக் கதைகள் (காமிக்ஸ்) மார்ச், ஏப்பிரல் அம்புலிமாமா, கண்ணதாசன் எழுதிய நூல்களும் எண்சோதிட புத்தகங்களும் பஞ்சாங்க வகைகளும் விற்பனையாகின்றன. ராஜன் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (3052)

### SAAIRAAM

பாவித்த அழகிய சோபா செற்றி - கட்டில், T.V, HAIR-DRIER, TAPE, FAN, FRIDGE சாப்பாட்டு மேசை இன்னும் பலவும் உடன் விற்பனைக்குண்டு SAAIRAAM 3ம் கட்டை பருத்தித்துறை வீதி, கல்வியன்காடு. (12280)

### கோழிக்குஞ்சு விநியோகம் (UPLANDS FARM)

தனிச் சிகப்பு, கறுப்பு, நிற சேவல் (பிலிமத்) கப்றுபுள்ளி சேவல் (LOHMAN) பிறவுண் சேவல், புறொயிலர்குஞ்சுகள், கறுப்பு, வெள்ளை பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் 11-4-90 புதன்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. இல-7 கந்தையா லேன், சுன்னாகம் (புகையிரத நிலையத்திற்கு அருகில்) (3226)

### வாங்கலாம்! விற்கலாம்

பழைய புத்தகங்கள் வாங்கப்படும். பழைய ஆனந்த விகடன், குமுதம், கல்கி, கலைமகள், சிவதொண்டன் முதலியன விற்பனைக்குண்டு. வெற்று சீமெந்து, கோழித்தீன் உறைகள், உரப்பைகள் வாங்கப்படும் Second Hand Book House, 13/6, ஸ்ரான்லி றோட், (முரசொலி இலங்கை வங்கிக்கு முன் பட்டப்படிப்புக் கல்லூரி லேன்) யாழ்ப்பாணம். (3225)

### எழுதுவினைஞர் தேவை

சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தக சங்கத்துக்கு எழுதுவினைஞர் தேவை. 18 வயதிற்கு மேற்பட்ட ஆங்கிலத்தில் கடித தொடர்புகள் செய்யக்கூடிய ஆண்கள் மட்டும் சொந்த கையெழுத்தில் நேரில் அல்லது தபால்மூலம் விண்ணப்பங்களை 2 -4-90 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சாவகச்சேரி நகர எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. செயலாளர் என். எம் ரி. பிறதர் கச்சாய் வீதி, சாவகச்சேரி. (3220)

### புத்தக ஓடர்

மங்கை, அம்புலிமாமா, ஆனந்தவிகடன், கல்கண்டு, கோகுலம், இரத்தினபாலா, பாலமித்திரா, சுமங்கலி, யூனியர்விகடன், யூனியர் போஸ்ட், இதயம், குங்குமம், இந்தியா ருடே, (தமிழ் - ஆங்கிலம்) பொறின்லைன், ஸ்போட்ஸ்ரார், ஏனைய எல்லா இலங்கை இந்திய சஞ்சிகைகளும். மீண்டும். பதிவு செய்யப்படுகின்றன. V.P. யிலும் பெறலாம். ஸ்ரீகாந் புத்தகசாலை இல 165. மின்சார நிலைய வீதி. பஸ் நிலையம் முன்புறம் யாழ்ப்பாணம். (சி/4227)


Jaffna Y M.C.A Centenary Celebrations 1990

Mr. Jaffna Contest

OPEN

(Only one Category)

Entries Close on 20 - 04 - 1990

Application Forms Are Obtainable From The

Jaffna Y.M.C.A Office

[C-4428]



Astrological Consultation

சோதிட ஆலோசனை

சோதிடர்

இராசதுரை மகாகணபதிப்பிள்ளை

இவரை யாழ். சைனீஸ் றெஸ்றோறன்ற் முதலாம் குறுக்குத் தெருவில் கீழ் கூறும் நாட்களில் (Room) அறை 4ல் சந்திக்கலாம்.

09 - 04 - 90 ஆம், 12 - 04 - 90 ஆம்

காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை

பலன் சொல்லுவதற்கு ரூபா 150/- கட்டி ஒழுங்கு செய்ய வேண்டும் இதற்கு ஜாதகக் குறிப்பு (மூலப் பிரதி பிறந்த இடம்) முக்கியம்.

[3135]


# அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் சுயதொழில் வாய்ப்புக்கு கடன்

## யாழ். செயலகம் புதியதிட்டம்

யாழ்ப்பாணம் ஏப்ரல் 6 வேலையற்று இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்த அரசு சார்பற்ற நிறுவனங்கள் மூலம் கடன் வழங்கும் திட்டம் ஒன்றை அரசாங்க செயலகம் நடைமுறைப்படுத்த இருக்கின்றது.

அண்மைக்காலச் சம்பவங்களால் வருமானம் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதி, விதவை ஆகியோருக்கு இந்த உதவி வழங்கப்பட இருக்கிறது.

மாதம் ஆயிரம் ரூபாவுக்குள் வருமானம் பெறும் 18-35 வயதுக்கு இடைப்பட்டோருக்கே இந்தக் கடன் வழங்கப்படும்.

அரசு சார்பற்ற நிறுவனம் ஒன்று தனக்கு வழங்கப்படும் வட்டியில்லாத் தொகையில் ஒருவருக்கு 5000 ரூபாவுக்குள் கடன் வழங்க வேண்டும் கடன் பெற்றவரிடம் இருந்து அந்த நிறுவனம் 4 வீதம் வட்டி அறவிடலாம். நிறுவனம் பெறும் கடன் ஐந்து வருடத்தில் மீளச் செலுத்த வேண்டும்.

கூட்டுறவு அடிப்படையில் தொழில் முயற்சி ஆரம்பிக்கவும், அவற்றை கண்காணிக்கவும் அந்த நிறுவனம் பொறுப்பாக இருக்கும். திட்ட அறிக்கைகளை அரச அதிபருக்கு சமர்பிக்க வேண்டும். (இ-3)


நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

## வொறி பொடி அடித்தலுக்கான கேள்வி விண்ணப்பம் கோரல்

எமது சங்கத்தால் புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட இசுசு லொறிக்கு பொடி அடித்தலுக்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் சங்கத்தில் ரூபா 10/- செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பதிவுத் தபால் மூலம் 21-04-90 க்கு முன் விண்ணப்பிக்கவும்.

பொதுமுகாமையாளர்
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்
திருநெல்வேலி.

[சி-4431]



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி

இராசரெத்தினம் மகேஸ்வரி

தோற்றம் 09 - 06 - 1936 மறைவு: 08 - 03 -1990

அன்பு மனைவியின் அந்தியேட்டிக் கிரியை இன்று (06 - 04 - 90) கீரிமலையிலும் 7 - 04 - 90 (சனி) எமது வீட்டில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
அன்புக் கணவர் இராசரெத்தினம்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

''அருள் சோதி பவனம்''
1ம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி.

[3140]


## வர்த்தக நிலையங்கள்

பச்சிலைப்பள்ளி ஏப்ரல் 6 சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தக சங்கத்தால் அண்மையில் தீர்மானிக்கப்பட்ட படி, வர்த்தக நிலையங்கள் யாவும் ஞாயிறு அரை நேரமும் திங்கள் முழு நேரமும் மூடப்படுகின்றன.

திங்கட்கிழமை வர்த்தக நிலையங்கள் மூடப்படுவதால் பொதுமக்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகின்றனர்.

முன்னர் நடைமுறையில் இருந்தது போல் வெள்ளி அரைநாளும் ஞாயிறு முழு நாளும் வர்த்தக நிலையங்களை மூட வர்த்தகர் சங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பொது மக்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர். (க-117)

## ஜனசக்தி செயல் திட்ட வேலைகள்

முல்லைத்தீவு ஏப்ரல் 06 ஜனசக்தி செயல் திட்ட வேலை முல்லைத்தீவு பட்டினத்தில் மிக உற்சாகத்துடன் நடைபெற்று வருகின்றது. கள்ளப்பாடு சனசக்திக் குழுக்கள் வீதிகளைத் திருத்தி வருகின்றன. மணற் குடியிருப்புப் பகுதியில் வீதிகள்- ஒழுங்கைகள் செப்பனிடப்படுகின்றன சுரைச்சிக் குடியிருப்பில் ஸ்ரீ வீரபத்தி விநாயகர்தேவஸ்தான வீதிகள் துப்பரவு செய்யப்படுகின்றது.

செல்வபுர மக்கள் மீண்டும் முல்லை - செல்வ புரம் வீதியால் பஸ் போக்குவரத்து நடைபெற வேண்டும் என்ற இலட்சியத்துடன் வீதியை செப்பனிட்டு வருகின்றார்கள்.

## இலங்கையை மீண்டும் விரும்புகிறார்களாம்

கொழும்பு, ஏப்ரல் 6 உல்லாசப் பிரயாணிகளுக்கு பாதுகாப்பான இடமாக இலங்கை மீண்டும் விளங்குகின்றது என்று ''நியூயோர்க் டைம்ஸ்'' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

இராமேஸ்வரத்தில் இருந்து தலைமன்னாருக்கு கப்பல் சேவை ஆரம்பிக்கலாம் என்ற எண்ணத்தில் நோர்வே, ஜப்பான், பிரான்ஸ் நாடுகளைச் சேர்ந்த உல்லாசப் பயணிகள் இந்திய சுற்றுலாவை முடித்துக் கொண்டு ராமேஸ்வரம் செல்கிறார்கள் என்றும் ''நியூயோர்க் டைம்ஸ்'' செய்தியில் கூறப்பட்டுள்ளது. [அ - எ]


மக்கள் வங்கி

# அடகு நகைகள் மீளளித்தல்

## யாழ்ப்பாணம் மாவட்டம்

பின்வரும் கிளைகளில் அடகு வைத்து, மீளப் பெறுவதற்காக பணம் செலுத்தியவர்களது நகைகள், யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு அருகில் இருக்கின்ற பொலிஸ் தொடர் மாடிக் கட்டிடத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வைத்து, கீழ்கண்டவாறு விநியோகிக்கப்படும்.

| | | | வழங்கும் திகதி | கிழமை |
|---|---|---|---|---|
| 1. | யாழ்/ஸ்ரான்லி வீதிக்கிளை | (15-10 89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | | |
| | | 31-03-83 வரை அடகு வைத்தவர்கள் | 06-04-90 | வெள்ளி |
| | | 31-03-83ன் பின்பு அடகு வைத்தவர்கள் | 07-04-90 | சனி |
| 2. | யாழ்/பிரதான வீதிக் கிளை புங்குடுதீவுக் கிளை | (12-10-89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 07-04-90 | சனி |
| 3. | யாழ்/கன்னாதிட்டிக் கிளை சங்கானைக் கிளை | (12-10-89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 07-04-90 | சனி |
| 4. | யாழ்/நவீன சந்தைக் கிளை | (12-10-89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 06-04-90 | வெள்ளி |
| 5. | சாவகச்சேரிக் கிளை பளைக் கிளை | (15-10-89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 06-04-90 | வெள்ளி |

மேற்குறிப்பிட்ட தினங்களில் காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 1.00 மணி வரை அடகு நகைகள் மீளளிக்கப்படும்.

அடகு வைத்தவர்கள் தமது அடையாள அட்டை, பணம் கட்டியதற்கான வங்கி இரசீது ஆகியவற்றுடன் சமூகந் தந்து நகைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

பிராந்திய முகாமையாளர்

மக்கள் வங்கி,
பிராந்தியத் தலைமையகம்,
யாழ்ப்பாணம்.

[சி-4429]



மானிப்பாய் கோ. பற்று ப நோ. கூ. சங்கம்

## பதவி வெற்றிடம்

இலிகிதர் பதவி (தற்காலிகம்)

சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள இலிகிதர் பதவிக்கான விண்ணப்பங்கள் 30-04-90 வரை ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பப்பத்திரத்தையும், தகைமைகள் பற்றிய விபரத்தையும் ரூ. 5/- செலுத்தி சங்க காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பொது முகாமையாளர்

[சி-4243]



# பிறந்தநாள் வாழ்த்து



★ செல்வி லக்ஷனா ★

புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தேவராஜா இராஜேஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வி லக்ஷனா தனது முதலாவது பிறந்த தினத்தை 06-04-1990 இல் கொக்குவில் ஸ்ரேசன் வீதியிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமர்சையாக கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அண்ணன்மார், சோபனா அக்கா, மற்றும் செல்வன் சித்தப்பா, சித்தி, அப்பம்மா, அம்மம்மா, செல்வன் மாமா, மாமி (சுவிஸ்), ராசன் மாமா, மாமி (சுவிஸ்), நாகேஸ் அன்ரி, ஈசன்ரி, சண் சித்தப்பா (சுவிஸ்), ராசாத்தி மாமி அனைவரும் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

இ. தேவராஜா,
ஸ்ரேசன் வீதி,
கொக்குவில்.

[சி-4244]



பனை அபிவிருத்திச் சபை

# பனை வளத் தொழிற்பாட்டு கண்காட்சி

எதிர்வரும் மே மாதத் தொடக்கத்தில் யாழ். நகரில் ''பனைவளத் தொழிற்பாட்டுக் கண்காட்சி'' ஒன்று நடைபெறவுள்ளது. பனையின் சமூக, பொருளாதார முக்கியத்துவத்தை வெளிக்கொணர்வதாக இருக்கும் இக் கண்காட்சியில் கலந்து கொள்ள விரும்புகின்ற, பனை வளத்தை அடிப்படையாகக் கொண்டு கைப்பணி, மற்றும் கைத்தொழிலில் ஈடுபட்டுவரும் ஸ்தாபனங்கள், மற்றும் தனியார் நிறுவனங்கள், தனியார் ஆகியோர் பொதுமுகாமையாளர், பனை அபிவிருத்திச் சபை, தேசிய வீடமைப்புச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உடன் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை.

[சி-4426]



ஸ்ரீ விராட் விஸ்வப் பிரம்மனே நம

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் சுக்கில ஆண்டு பங்குனி மாதம் 25 ஆம்நாள் (07 - 04 - 1990) சனிக்கிழமை காலை 10 மணி 40 நிமிடம் தொடக்கம் 11 மணி 50 நிமிடம் வரையுள்ள சுபலக்கின சுபமுகூர்த்த வேளையில்

| எமது சகோதரன் திருநிறை செல்வன் **தியாகராஜா** அவர்களுக்கும் | எமது சிரேஷ்ட புத்திரி திருநிறை செல்வி **மங்களநாகநாயகி** அவர்களுக்கும் |
|---|---|

திருவருள் துணைகொண்டு வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலில் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் சுற்றத்தாரும் வருகை தந்து மணமக்களை ஆசிர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:

தங்கள் நல்வரவை நாடும்:

திரு கா. பாலசுப்பிரமணியம்,
தம்பதிகளும்,
சகோதரர்களும்,
கன்னார லேன்,
நல்லூர்.

திருமதி
யோ. ஆனந்தசுந்தரம்,
சகோதரர்கள்,
கருவேலடி லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(3119)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

அசையியற்கு உண்டாண்டோர் ஏஎர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும்.

**பொருள்:**

யான் நோக்கும் போது அதற்காக அன்பு கொண்டவளாய் மெல்லச் சிரிப்பாள்; அசையும் மெல்லிய இயல்பை உடைய அவளுக்கு அப்போது ஓர் அழகு உள்ளது.


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288
06 - 04 - 1990 த. பெ இலக்கம் 25


## மேலோட்டப் பேச்சு

இரண்டாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து, ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸ, கடந்த புதன்கிழமை சுமார் ஒரு மணி நேரம் கொள்கை விளக்க உரை நிகழ்த்தினார். தமது கடந்த கால சாதனைகளையும், எதிர்வரும் நடப்பாண்டில் செய்ய உத்தேசித்துள்ள திட்டங்களையும் தொட்டுக் காட்டும் விதத்தில் அரசாங்கத் தலைவர் ஒருவரின் கொள்கை விளக்க உரை அமையும். ஜனாதிபதி பிரேமதாசாவின் உரையும் அந்த வகையில் சம்பிரதாய பூர்வமாக மட்டுமே அமைந்திருந்தது. சிறப்பானது என்று வரவேற்று விமர்சிக்க அதில் பெரிதாக எதுவும் இருக்கவில்லை. சுமாரானது; அவ்வளவுதான்!

கடந்த காலம் சென்றாகிச் செலவாகிவிட்டது. கஷ்டங்கள், துன்பங்கள், இன்னல்கள் என்று எல்லாவற்றையும் அக்காலத்தில் அனுபவித்தவர்கள் மக்கள் தான். இனிமேல் விடிவு வருமா, கஷ்டம் நீங்குமா, அநீதி ஒழியுமா என்பதைத்தான் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

அவற்றில் முதலுரிமை கொடுத்து கவனிக்கப்பட வேண்டிய பிரதான விவகாரங்கள் இரண்டு. ஒன்று இந்நாட்டின் ஆறாத புண்ணாக, ஆண்டாண்டு காலமாகச் சீழ் வடியும் நிலையில் உள்ள இனப்பிரச்சினை. அடுத்தது, தேய்ந்து தேய்ந்து செல்லும் பொருளாதார நிலை சம்பந்தப்பட்ட பிரச்சினை. இவை இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. பூதாகாரமாகத் தோற்றம் கண்டவை.

இனப்பிரச்சினை தமிழ் மக்கள் முதலிடம் கொடுத்துப் பார்க்கும் விவகாரம். அது நிரந்தரமாக, நியாயமாக, நீதிமுறை நின்று தீர்க்கப்படமாட்டாதா என்று அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டே இருக்கிறார்கள்.

சிங்களப் பொது மக்களைப் பொறுத்த வரையில் அவர்கள் முதலிடம் கொடுத்துப் பார்ப்பது பொருளாதாரப் பிரச்சினையையே. மறைந்து கிடக்கும் பஞ்ச நிலையும், வாழ்க்கைச் செலவுச் சுமைப் பளுவும் நீங்கமாட்டாவா? ஆகக் குறைந்தது உணவு, உடை, உறைவிடம் ஆகிய மூன்று முக்கிய மனித அடிப்படைத் தேவைகளுமாவது நிறைவேறி ஒரு சுமாரான வாழ்க்கை வாழமுடியாதா? இவ்வாறு எண்ணற்ற மக்கள், லட்சக்கணக்கான மக்கள், ஏங்கித் தவிக்கிறார்கள்.

நாட்டின் வளமும் செல்வமும், அபிவிருத்தி வேலைகளின் நல்ல அறுவடைகளும் குறிப்பிட்ட சாராரையே சேராமல், பரவலாக எல்லாத்தரப்பினருக்கும் பயன்படாவா என்று சமூக நல விரும்பிகள் எதிர்பார்க்கிறார்கள்.

இந்த இரண்டு பிரதான விவகாரங்கள் சம்பந்தமாகவும் உருப்படியான, உறுதியான, மக்களுக்கு நம்பிக்கை தரக்கூடிய விதத்தில் ஜனாதிபதியின் உரை அமையவில்லை என்பதே உண்மை. பேச்சுச் செயல்வடிவம் எடுத்துப் பயன்தரும் என்பது இந்நாட்களில் மிக அரிது. அப்படியிருக்கப் பேச்சே உருப்படியாக இல்லாதபோது மக்கள் தமது பிரச்சினைகள் தீரும் என்று நம்புவது எப்படி?

எனது அரசாங்கம் நீதியையும், நியாயத்தையும் நிலைநாட்டுவதற்கான மன உறுதியைக் கொண்டுள்ளது—

நாட்டின் இனப்பிரச்சினை விரைவில் தீர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். அதற்கான முயற்சிகளில் அரசாங்கம் இப்போது ஈடுபட்டுள்ளது. விட்டுக் கொடுப்பதன் மூலமும் பரஸ்பரம் புரிந்துணர்வை ஏற்படுத்துவதன் மூலமும் இனப் பிரச்சினையைத் தீர்க்கமுடியும்—

வடக்கு, கிழக்குப் பகுதிகளின் பிரச்சினைகள் மிகவும் சிக்கல் வாய்ந்தவை. சம்பந்தப்பட்டவர்கள் யாவரும் திருப்தி அடையும் வகையில் அந்தப் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட வேண்டும்— என்று ஜனாதிபதி இனப்பிரச்சினை குறித்து மேலோட்டமாகவே கூறியுள்ளார்.

தமிழர்களின் உரிமைகளை வழங்குவதில் எந்தளவுக்கு விட்டுக்கொடுத்து, எந்த அணுகுமுறையைக் கடைப்பிடித்து, நீதியையும், நியாயத்தையும் எவ்வாறு நிலைநாட்ட உத்தேசித்திருக்கிறார் என்பதின் ஆரம்பக் கோட்டைத்தானும் அவரது உரையில் கீறிக்காட்டவில்லை! எதையும் ஆழமாக அழுத்திக் கூறி அகப்பட்டுக் கொள்ள விருப்பம் இல்லைப் போலும்!!

பொருளாதாரத்தை மேம்படுத்துவது, வாழ்க்கைச் செலவைக் குறைப்பது, தொழில் வாய்ப்பை ஏற்படுத்துவது, நாட்டின் வளத்தை சகல மக்களுக்கும் சமமாகப் பங்கிட்டு சமூக சமத்துவத்தை ஏற்படுத்துவது ஆகியன சம்பந்தமாகவும் அவர் எதையும் நயந்து ஏற்கும் விதத்தில் ஆணித்தரமாகச் சொல்லவில்லை. அங்கும் வெறும் மேலோட்டமான கவர்ச்சி வாசகங்களே! உருப்படியாக, உறுதியாக கல்மேல் எழுத்துப்போல் எதுவுமே இல்லை!!

## சட்டவிரோத பாவனையாளரின் இணைப்பைதுண்டிக்கஉத்தரவு

கோப்பாய், ஏப்ரல் 6

வலி கிழக்கு பிரதேச சபையின் கோப்பாய், நீர்வேலி, அச்சுவேலி, உரும்பிராய், உப அலுவலக எல்லைக்குள் சட்டவிரோத மின் பாவனையில் ஈடுபடுவோர், மின்மானியில் மோசடி செய்வோர் ஆகியோரின் மின் இணைப்புக்கள் எதுவித முன்னறிவித்தலும் இன்றித் துண்டிக்கப்படும். அத்துடன் தண்டமும் அறவிடப்படும்.

இதனை உடனடியா அமுல் செய்யும்படி வலிகிழக்கு பிரதேச சபையின் விசேஷ ஆணையாளர் உப அலுவலகங்களின் மின் அத்தியட்சகர்களைப் பணித்துள்ளார். (இ-72)

### திருத்த வேலை

கோப்பாய், ஏப்ரல் 6

கோப்பாய் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோவிலின் தேர் முட்டியில்ரூ. 75ஆயிரம் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-72)

### அனுமதி பத்திரங்கள்

கொழும்புத்துறை ஏப்ரல் 6

யாழ் மாவட்டத்தில் மார்ச் 15 ஆம் திகதி வரை 1010 மோட்டார் வாகன அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று யாழ் செயலக இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# யாழ்ப்பாணம் உட்பட 4 மாவட்டங்களில்
# மரவேலை, கட்டட வேலைப் பயிற்சித் திட்டம்

## புனர்வாழ்வு அமைச்சுடன் இணைந்து 'கெயர்'ஸ்தாபனம் ஆரம்பிக்கும்

யாழ்ப்பாணம், ஏப் 6

அகில உலக கெயர் ஸ்தாபனம் புனர்வாழ்வு அமைச்சுடன் இணைந்து மரவேலை, கட்டுவேலைப் பயிற்சித் திட்டம் ஒன்றை யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மன்னார் ஆகிய நான்கு மாவட்டங்களிலும் ஆரம்பிக்க இருக்கிறது.

ஒவ்வொரு பயிற்சிக்கும் 25 பேர் வரையில் தெரிவு செய்யப்படுவர்.

இரண்டரை மாதம் பயிற்சியின் பின்னர் 10 மாதங்களுக்கு பயிலுநர் வேலையாளர் பயிற்சி அளிக்கப்படும்.

நிலையப் பயிற்சிக் காலத்தில் மாதம் 600 ரூபா ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படும். பயிலுநர் பயிற்சிக் காலத்தில் சேவைக்கேற்றவாறு பணம் வழங்கப்படும்.

நிலையப்பயிற்சி முடிந்த பின் பயிற்சியாளர்களுக்கு ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்படும் பயிற்சி முடிவில் சுயதொழில் வாய்ப்புப் பெற வங்கி மூலம் கடன் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்படும்.

இப்பயிற்சிகள் யாழ் மாவட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, தொழில் நுட்பக் கல்லூரி, யாழ் பற்றீசன் இன்ஸ்ரிற்றியூட், ஊர்காவற்றுறை எமிலிஸ் இன்ஸ்ரிற்றியூட், கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி ஆகிய இடங்களிலும்,

கிளிநொச்சி மாவட்டத்தில் வன. லோங் இன்ஸ்ரிற்றியூட்டிலும்—

மன்னார் மாவட்டத்திலும் நெசவியர் இன்ஸ்ரிற்றியூட்டிலும் —

முல்லைத்தீவு மாவட்டத்தில் சி. எஸ். ஐ. இன்ஸ்ரிற்றியூட்டிலும் வழங்கப்படும்.

இந்த பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிப்பவர்களுக்கான பயிற்சிநெறி கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை நடைபெறும். (இ-3)

## சட்டவிரோத விற்பனை தடை

கிளிநொச்சி ஏப் 6

தென்மராட்சி பகுதியில் சட்ட விரோதமாக மதுபானம், கள் ஆகியன விற்பனை செய்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

உத்தரவு பெற்ற விற்பனையாளர்களும், தெங்கு பனம் பொருள் விற்பனவு கூட்டுறவு சங்கங்களும் மட்டுமே விற்பனையில் ஈடுபட வேண்டும் என்றும் இவற்றை மீறுபவர்களுக்கு தண்டனை வழங்கப்படும் எனவும் தென்மராட்சி விடுதலைப் புலிகள் தொழிலாளர் பேரவை அறிவித்துள்ளது.

(இ-76)

## மீளக்குடியேறியோருக்கு வீட்டுப் பாவனைப் பொருள்கள்

முல்லைத்தீவு, ஏப்ரல் 6

கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய இடங்களில் மீளக்குடியேறிய குடும்பங்களுக்கு முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. வே. கந்தசாமி, கிராம சேவை உத்தியோகஸ்தர்கள் திருவாளர்கள் ரி. ஜெயநாதன் எஸ். அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் உதவியுடன் கோடரிகள், வாளிகள் மற்றும் வீட்டுப் பாவனை உபகரணங்கள் வழங்கினார்.

றெட்பான ஸ்தாபனத்தினர் இவற்றைநன் கொடையாக வழங்கி இருந்தனர். (இ - 2)

### மஞ்சத் திருவிழா

யாழ்ப்பாணம், ஏப. 6

மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவில் மஞ்சத் திருவிழா நாளை 7 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

### சாரணர் பாசறை

வடமராட்சிப் பகுதியில் சாரண அணித்தலைவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான பாசறை இம்மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரை சரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. பருத்தித்துறை சாரண மாவட்ட ஆணையாளர் திரு. கோ. செல்வவிநாயகம் இதை அறிவித்துள்ளார் (க-118)

## சட்டவிரோத மின்பாவனை: அரிசி ஆலைக்கு அபராதம்

சேமமடு, ஏப்ரல் 06

தாண்டிக்குளம் பகுதியில் உள்ள அரிசி ஆலை ஒன்றில் மின்சார மோசடி செய்யப்பட்டனவவுனியா நகரசபை அதிகாரிகள் கண்டுபிடித்தனர் இது சம்பந்தமாக அறியவருவதாவது;-

முறைப்பாடு ஒன்றைத் தொடர்ந்து நகரசபை அதிகாரிகள் தாண்டிக் குளம் பகுதியில் அமைந்துள்ள அரிசி ஆலை ஒன்றுக்குத் திடீர் விஜயம் செய்தனர்.

அங்கு அரிசி குற்றுவதற்குப் பயன்படும் மோட்டாரைப் போடுமாறு பணித்தனர். மோட்டர் ஓடியது. ஆனால் மின்மானி ஓடவில்லை.

அரிசி ஆலை உரிமையாளரின் தந்திரம் அப்போது தெரியவந்தது.

அரிசி ஆலைக்குச்சட்ட விரோதமாக மின்சாரம் பாவித்ததற்காக அதன் உரிமையாளருக்குத் தண்டம் விதிக்கப்பட்டது, (இ-37)

### குறமகள் கதைகள் அறிமுக விழா

யாழ்ப்பாணம் ஏப்ரல் 6

தெல்லிப்பழை கலை இலக்கியக்களத்தின் 28 ஆவது ஒன்று கூடலில் குறமகள் கதைகள் அறிமுக விழா 7 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.15 மணிக்கு நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை, பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறும் இவ் விழாவுக்கு கலாநிதி. நா. சுப்பிரமணியன் தலைமை வகிப்பார்.

திருமதி கோகிலா மகேந்திரன் அறிமுகவுரை நிகழ்த்துவார். திருமதி மௌ. சித்திரலேகா திரு. பி. நடராஜன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவார்கள்.

(சி-க)

### யாழ். பல்கலை பரீட்சை

## பேராதனை, கொழும்பு மாணவரும் தோற்றலாம்

யாழ்ப்பாணம் ஏப்ரல் 6

யாழ்- பல்கலைக் கழகத்தில் நடைபெற்று வரும் பேராதனை வெளிவாரிப் பரீட்சை டீ ஏ இறுதி ஆண்டு பரீட்சையில் பேராதனை, கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களும் தோற்ற சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 31 ஆம் திகதி தொடக்கம் இந்த பரீட்சைகள் இங்கு நடைபெற்றுவருகின்றன. எதிர் வரும் 30 ஆம் திகதி வரை இப்பரீட்சைகள் நடைபெறும்.

இப்பரீட்சையின் இறுதி ஆண்டுக்கு பேராதனை, கொழும்பு பல்கலைக்கழகங்களில் தோற்ற வேண்டியவர்கள் இங்கு தோற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## பல்கலைக்கழக மாணவருக்கு மானியம் நிதியாகக் கிடைக்கும்

### உயர் மட்டத்தில் ஆலோசனை

யாழ்ப்பாணம் ஏப்ரல் 6

பல்கலைக்கழக மாணவர்களுக்கு மானியம் இனி நிதியாகவே வழங்கப்படும். அவர்கள் அந்த நிதியின் மூலம் தம் கல்வியைத் தொடரலாம்.

இப்படியான திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த பல்கலக்கழக மானிய ஆளணிக் குழுவின் உயர் மட்டத்தில் ஆராயப்பட்டு வருகிறது.

நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் சுமார் அரை வீதம் ஒதுக்கீடு உயர் கல்விக்கு செலவிடப்படுகிற போதும் ஆறாயிரம் மாணவர்களுக்கு மட்டுமே உயர் கல்வி அளிக்க முடிகிறது.

உயர் கல்வி வாய்ப்பை அதிகரிக்கும் நோக்குடனேயே புதிய திட்டம் அமுலாகி உள்ளது. (இ-3)

### கிராம அபிவிருத்தி கருத்தரங்கு

சேமமடு ஏப்ரல் 6

வவுனியா மாவட்ட அபிவிருத்தியில் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பங்கு என்பது பற்றிய கருத்தரங்கும் கலந்துரையாடலும் எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 9 மணிக்கு வவுனியா தெற்கு உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் திட்டமிடல் பணிப்பாளர் எஸ் றங்கராஜா அபிவிருத்தித் திட்டங்களில் கிராமமுன்னேற்றச் சங்கங்களின் பங்கு என்பது பற்றி உரையாற்றுவார்.

மற்றும் விவசாயப் பணிப்பாளர் திரு ஏ கிருஷ்ணர் கால்நடை வைத்திய அதிகாரி இ. ஜி சிவபாதசுந்தரம், திரு. வீ. குமாரசாமி ஆகியோரும் கலந்து கொள்வர் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(இ-37)

# புதிய கல்விப்பணிப்பாளர் சேவை மீண்டும் கிடைத்தது குறித்து மகிழ்ச்சி

### பள்ளிவாசல் பரிபாலன சபைகள்

யாழ்ப்பாணம், ஏப் 6

யாழ் பிரதேச கல்விப்பணிப்பாளராக திரு. இரா சுந்தரலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளதற்கு யாழ் முஸ்லிம் வட்டாரத்தைச் சேர்ந்த பல சமூக நிறுவனங்களும், பள்ளிவாசல் பரிபாலன சபைகளும் தமது பாராட்டைத் தெரிவித்துள்ளன.

'திரு. இரா. சுந்தரலிங்கம் இன மத பேதமின்றி நடுநிலை நின்று யாழ் மக்களின் கல்வி மேம்பாட்டுக்கு பணிபுரியும் நற்குணாளன். முன்னர் அவர் யாழ் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய போது முஸ்லிம் பாடசாலைகளின் அபிவிருத்திக்கென முஸ்லிம் கல்விக் குழு ஒன்றை ஏற்படுத்தி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டார். அவரது செயல்களை நாம் நன்றியுடன் நினைவு கூருகிறோம். பிரச்சினைகளை சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு இடமின்றி, முகவர்கள் மூலம் அணுகாது தானே நேரடியாகப் பரிசீலனை செய்து தீர்க்கமான முடிவை மேற்கொள்பவர்.

அவரது சேவை மீண்டும் கிடைத்துள்ளதை யாழ்வாழ் முஸ்லிம்களின் சார்பில் மனப்பூர்வமாக வரவேற்கிறோம்.

இவ்வாறு பாராட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் முஸ்லிம் அபிவிருத்திச் சங்கம், யாழ் முஸ்லிம் இணக்கசபை, யாழ் முஸ்லிம் சமூக அபிவிருத்திச் சங்கம், யாழ் முஸ்லிம் கல்விக் குழு, அல்-பதாஹ் சனசமூக நிலையம், யாழ் முஸ்லிம் விளையாட்டுக் கழகம், இலெவின் ஹாட் விளையாட்டுக்கழகம், யாழ் ஒஸ்மானியாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், முஸ்லிம் போக்குவரத்து ஒன்றியம், அகில இலங்கை முஸ்லிம் லீக் (யாழ் கிளை) ஆகிய சமூக நிறுவனங்களும் —

யாழ் சின்னப்பள்ளிவாசல், பெரிய கடை ஜும்மாப் பள்ளிவாசல், வெள்ளக் கடற்கரைப் பள்ளிவாசல், கமால் பள்ளிவாசல், புதிய முகிதீன் பள்ளிவாசல், புதுப் பள்ளிவாசல், பெரியமுகிதீன் பள்ளிவாசல், சிவலை பள்ளிவாசல், சின்னக்கடை கோட்டைப் பள்ளிவாசல் ஆகியவற்றின் பரிபாலனசபைகளும் மேற்படி பாராட்டைத் தெரிவித்துள்ளன. (இ)

### சிறுவன் காயம்

தெல்லிப்பளையைச் சேர்ந்த செ. கபில் (வயது4) என்ற சிறுவன் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த போது பழைய கதவு நிலை ஒன்று விழுந்ததால் காயம் அடைந்தார்.

யாழ். போதனா வைத்திய சாலையில் அவர் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். (இ-5)

### மீனவருக்கு தடை

முல்லைத்தீவு வட்டுவாகல் ஆற்றில் இறால் பிடிக்கும் மீனவர்கள் ஆற்றில் இறங்கி வலைவீசுவதற்கும் படுப்பு வலைகள் பாவிப்பதற்கும் விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியினரும் முல்லை, கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினரும் தடை விதித்துள்ளனர். (இ-92)

### நாணய மாற்று விகிதம்

04-4-1990

இலங்கை மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 231.79 | 232 94 |
| 100 | அமெரிக்க டொலர் | 3997.15 | 4002.80 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுண்ட் | 6526.71 | 6557.19 |
| 100 | ஜேர்மன் மார்க் | 2347.53 | 2365 36 |
| 100 | பிரெஞ்சு பிராங் | [illegible] | [illegible] |
| 100 | [illegible] | 35.0234 | 35.2355 |

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### வாசகர் திருமுகம்

## ஆரியகுளத்தை அழகாக்குவோம்

யாழ் மாநகரப் பகுதிக்குள் பல குளங்கள் இருந்தும் எதுவும் அழகுபடுத்தப்படாது குப்பைகள் சேரும் பரப்புக்களாக மாறி வருவதும், நீண்ட காலம் தூர் எடுக்காது சேறு, சகதி நிறைந்தும், நீர்த் தாவரங்களால் மூடப்பட்டு இருப்பதும் கவலை தருவனவாக உள்ளன. எனவே எங்கள் நகரத்தில் இருக்கும் ஓரிரு குளங்களை அழகுபடுத்தி பொழுதுபோக்கு மையங்களாகவும் நகரை அழகுபடுத்தும் இடங்களாகவும் இருக்கச் செய்யலாம்.

வடமேற்கு மூலையில் மீன் வகைகள் ஏற்றி இறக்குவதனால் ஏற்படும் 'வெடில்' மணம் அப்பகுதியூடாக பிரயாணம் செய்வோரை பல அசௌகரியங்களுக்குண்டாக்குகிறது.

இக் குளம் தூர் அகற்றப்பட்டு தாவரங்களும் அழிக்கப்பட்டு தெளிவான நீர் ஆக்கி சுத்தம் செய்து அழகுபடுத்தப்படுமேயானால் அயற் குடியிருப்புக்களான ஆனைப் பந்தி, சிறாம்பியடி, அத்தியடி ஆரியகுளம் பகுதிகளின் கிணற்று நீர் தரைக் கீழ் நீரைப் பேணி நன்னீரைப் பெறுவதற்கும் வழிவகுக்கும்.

இக் குளத்தைச் சூழ தெற்கு, கிழக்கு,மேற்கு பகுதிகள் அரண் அமைக்கப்பட்டு சுற்றுப்பாதை அமைக்கப்படுமேயானால் குளத்தைச் சுற்றியுள்ள பகுதி மக்களுக்கு பின்புறப் பாதையும் கிடைக்கும். குளத்தைச் சுற்றி மக்கள் பவனி வருவதற்கும் ஏற்றதாக இருக்கும்.

இச் சுற்று வீதி மின் விளக்குகளினால் அலங்கரிக்கப்பட்டு, குளக்கட்டுகளில் மக்களுக்கு ஆசனங்களும் அமைக்கப்பட வேண்டும். குளத்தில் சிறிய சந்தோஷப் படகுகள் சென்று வர சிறிய இறங்குதுறையும் அமைக்கப்பட்டால் இக்குளம் நகரின் ஒரு கவர்ச்சி மையமாக அமையும். கண்டி நகரை கண்டி ஏரி எவ்விதம் அழகுபடுத்துகிறதோ அதே போன்று யாழ் நகரை இக் குளம் மூலம் அழகுபடுத்தலாம்.

இதற்கு ஆரியகுளம், சிறாம்பியடி. அத்தியடி வாழ் மக்களும் தமது பூரண ஒத்துழைப்பைத் தந்து உதவி புரிய வேண்டும்.

உ. அம்பிகா
ஆனைப்பந்தி.

## டச்சு வீதி திருத்தப்படுமா?

இராசவீதியால் பிரிந்து செல்லும் டச்சு வீதி கோப்பாய் தெற்கில் அமைந்துள்ளது. இவ் வீதியைத் திருத்த மூன்று நாலு ஆண்டுகளுக்கு முன் கல் பறிக்கப்பட்டிருந்தது. அக் கல் அனைத்தும் தற்போது சிதைந்து சின்னா பின்னப்பட்டிருக்கின்றன.

முன்பு இவ் வீதியால் யாழ்ப்பாணத்தில் இருந்து இருபாலை மட்டும் போக்குவரத்துச் சேவை பஸ் ஓடியது. ஆகவே டச்சு வீதியைத் திருத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

நாகமணி மகேந்திரலிங்கம்
சட்டப்பிராய்.

## உறவை முறிக்காதீர்கள்




''இன்னும் இறைவனை வணங்குங்கள். அவனுக்கு எவரையும் எப் பொருளையும் இணை சேர்க்காதீர்கள். பெற்றோர்களுடன் அன்போடும், பரிவோடும் நடந்து கொள்ளுங்கள். (அது போன்றே) உறவினர், அனாதைகள், ஏழைகள், அண்டை வீட்டு உறவினர், அண்டை வீட்டு அயலார், உங்களுடன் இருக்கும் நண்பர்கள் வழிப் போக்கர்கள், உங்கள் ஆதிக்கத்திலுள்ள அடிமைகள் ஆகியோரிடத்தும் அன்போடு நடந்து கொள்ளுங்கள்.

(அல்- குர்ஆன்)

நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் நவின்றார்கள் ''(குடும்ப உறவை) முறிப்பவன் சுவனம் புகமாட்டான்'' புகாரி- முஸ்லிம்)

''சரிசமமாக நடந்து கொள்பவன் பந்துக்களை ஆதரிப்பவன் அல்லன்; அவர்கள், அவனின் உறவைத் துண்டிக்கும் போது அவர்களை ஆதரிப்பவனே பந்துக்களை ஆதரிப்பவனாவான்'' (புகாரி)

## உள்ளகப் பட்டப்பின் பயிற்சி நெறி

★ பட்டதாரி ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம் ★
விண்ணப்பமுடிவுத் திகதி: (06 - 04 - 1990)
கல்வி கலாசார அமைச்சால் 28-4-90ல் நடாத்தப்படும்
போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு

## விசேட பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: 09 - 04 - 1990 மு. ப. 9 மணி
★ பாடநெறி பொது உளச்சார்பும்-பொது அறிவும்
★ தொடர்ச்சியாக 10 தினங்கள்
★ இலவச பாடக் குறிப்புகள்
★ கட்டணம் ரூபா 150. 00
பயிற்சி வகுப்புக்கள் 101/10 ஸ்ரான்லி வீதியில் உள்ள அஸ்ரன் கிளை நிறுவனத்தில் நடைபெறும் (மக்கள் வங்கி அருகாமையில்)
விபரங்களுக்கு:
**ASTAN INSTITUTE**
166/1, Hospital Road, Jaffna.
(A S சங்கரப்பிள்ளை கட்டிடம் 1 ஆம் மாடி)
[சி-4229]

## Vespa (வெஸ்பா) ஸ்கூட்டர் 96.c.c

புதிய கவர்ச்சியான, சிக்கனமுமான
வெஸ்பா ஸ்கூட்டர்
கலனுக்கு 260 km. வேலை செய்யும்.
Electronic Ignition,
Side Lights.
தொடர்பு:-
3, நவீன சந்தை (மேல்மாடி)
யாழ்ப்பாணம்
(சி/4234)

## கலை வர்த்தகக் கல்லூரி
## C. C. A.

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்தி அருகே)
A/L 90 மீட்டல், வினா - விடை
வகுப்பு
**DAY CLASSES**
பிரிவு 04

| | | | |
|---|---|---|---|
| வர்த்தகம் | 11.00 | — | 12.00 |
| கணக்கியல் | 12.00 | — | 1.00 |
| பொருளியல் | 1.00 | — | 2.00 |

ஆரம்பம்: 09 - 04 - 1990
திங்கள் 11.00 .am
★ எமது வழமையான ஆசிரியர் குழு
★ வாரத்தில் ஐந்து நாட்களும் அனைத்துப் பாடங்களும் நடைபெறும்.
★ முழுப் பாடத்திட்டமும் முடிக்கப்படும்.
★ வினா - விடை வகுப்பு இலவசமாக நடைபெறும்.
★ 1980 - 89 வரையிலான 10 வருட பரீட்சை வினாக்களுக்கான விடைகள் கற்பிக்கப்படும்.
★ பிரிவு 1, 2, 3, என்பவற்றிற்கான அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.
★ பிரிவு 4இற்கு குறிப்பிட்டளவு மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். 15 - 04 - 90 திகதிக்குப் பின்னர் பகல் நேர வகுப்புகளுக்கு அனுமதிகள் வழங்கப்படமாட்டாது.
★ பிரிவு 4 இற்குப் பின்னர் புதிய பிரிவுகள் எதுவும் ஆரம்பிக்கப்படமாட்டாது.
[சி-4239]

## கலை வர்த்தகக் கல்லூரி
## C. C. A.

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்தி அருகே)
A|L 90
கணக்கியல் (கம்பனி முடிவுக் கணக்குகள்)
ஸ்ரீ
இந்துநாகரிகம் (மீட்டல்வினா-விடை வகுப்பு)
கிருஷ்ணா
ஆரம்பம்: 07 - 04 - 90 சனி பி.ப. 2.00 (சி4337)

## நீங்களும் பட்டதாரியாகலாம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாக பட்டதாரியாவதற்கு A/Lல் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட பயிலுனர் ஆசிரியர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான பதிவு செய்யும் விண்ணப்ப திகதி நீடிக்கப்பட்டுள்ளமையால் விண்ணப்பப் படிவங்களையும் விபரங்களையும் கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக் கொள்ளவும்.

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
[சி-4211]

★ ஈராக்கின் ரசாயன ஆயுதங்கள்

# வளைகுடா அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் என ஈரான் அறிவிப்பு

நிக்கோஸியா, ஏப் 5
வளைகுடா யுத்தத்துக்கு அமைதித் தீர்வு காணும் முயற்சிக்கு ஈராக்கின் இரசாயன ஆயுத வலிமை ஒரு பயமுறுத்தலாக அமைவதாக ஈரான் குற்றஞ்சாட்டியுள்ளது.

ஈராக்கின் இரசாயனத் தாக்குதல்களைச் சமாளிக்க ஈரான் தயாராய் இருப்பதாக ஈரான் நாடாளுமன்றத்துக்குழுத்தலைவர் அகமட் அஸிஸி, சைப்பிரஸில் சர்வதேச நாடாளுமன்றக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

ஈராக் இஸ்ரவேலினால் தாக்கப்படும் பட்சத்தில் இரசாயண ஆயுதங்களை ஈராக் பாவிக்கும் என்று ஜனாதிபதி சதாம்ஹுசேன் அறிவித்திருந்தார். ஜனாதிபதி ஹுசேன் ஈரானுக்கு எதிராக இரசாயன ஆயுதங்கள் பாவிக்கப்படும் என்று அறிவிக்கவில்லை. ஆனால் ஜனாதிபதி ஹுசேன் பைத்தியக்காரத்தனமாக இரசாயன ஆயுதங்களை ஈரான் மீது பாவிக்கக் கூடும் என்று தெஹ்ரான் அரசு வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

## புதிய ரக பிளாஸ்டிக்

டோக்கியோ, ஏப் 5
சிந்தும் எண்ணெயை உறிஞ்சி எடுக்கக் கூடிய புதிய வகை பிளாஸ்டிக் பொருளை ஜப்பானிய நிறுவனம் ஒன்று கண்டு பிடித்துள்ளது.

## மாநகரசபைத் தேர்தல்கள்

சென்னை ஏப்ரல் 5
சென்னை, மதுரை, கோவை ஆகிய மாநகர சபைகளின் தேர்தல்கள் எதிர்வரும் செப்டம்பர் 30 ஆம் திகதிக்குள் நடத்தப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. (எ)

★ 27 ஆண்டுகளின் பின்னர்

# இங்கிலாந்துக்கு விஜயம் செய்த முதலாவது இந்திய ஜனாதிபதி

லண்டன் ஏப் 5
நான்குநாள்விஜயம்ஒன்றை மேற்கொண்டு இந்திய ஜனாதிபதி வெங்கட்ராமன்திங்கள் லண்டன் போய்ச் சேர்ந்தார்.

அவரை விமான நிலையத்தில் எடின்பரோ கோமகன் வரவேற்றார்.

27 ஆண்டு கால இடைவெளியின் பின்னர் இந்திய ஜனாதிபதி ஒருவர் இங்கிலாந்துக்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும்.

1963 ஆம் ஆண்டில் டாக்டர் இராதா கிருஷ்ணன் இந்திய ஜனாதிபதி என்ற முறையில் இங்கிலாந்துக்குவிஜயம் செய்தார் (எ)

## லத்வியாவும் சுதந்திர பாதையில்

மாஸ்கோ ஏப்ரல் 5
பால்டிக் குடியரசுகளில் ஒன்றான லத்வியா மாநிலமும் சுதந்திரக் கோரிக்கையை வலியுறுத்த தொடங்கியுள்ளது.

இது சம்பந்தமாகக் காரசாரமான பேச்சுக்களை லத்வியா அதிகாரிகள் மாஸ்கோவில் மத்திய அரசு அதிகாரிகளுடன் நடத்தினர். (எ)

# சோவியத்துடன் ராஜீய உறவு தென் கொரியா ஏற்படுத்தும்!

சோல் ஏப்ரல் 5
சோவியத்யூனியனுடன் ராஜதந்திர உறவை மீண்டும் ஏற்படுத்த தென்கொரிய அரசு முன்வந்துள்ளது.

மாஸ்கோவுக்கு அண்மையில் சென்று இருந்த போது தென்கொரிய லிபரல் கட்சித் தலைவர்களில் ஒருவர் கிரெம்ளின் அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தி இருந்தார்.

கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பலவற்றுடன் தென் கொரியா ஏற்கனவே ராஜதந்திர உறவை ஏற்படுத்தி உள்ளது.

இது வடகொரிய அரசுக்கு மனத்திருப்தியை அளிக்கவில்லை. (எ)

## தமிழக அரசு நடவடிக்கை

சென்னை ஏப்ரல் 5
இந்தியில் தான் தொடர்பு கொள்ள வேண்டும் என்று மகாராஷ்டிர மாநில அரசும் உத்தரப் பிரதேச அரசும் வற்புறுத்தினால் அவற்றுடன் தமிழ்நாடு அரசு ஒருபோதும் தொடர்பு வைத்துக் கொள்ளாது.

இவ்வாறு தமிழகக் கல்வி அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் தெரிவித்தார்.
இந்தி பேசாத மாநிலங்களுடன் ஆங்கிலத்திலேயே தொடர்பு கொள்ளும் உறுதி மொழியை முன்னாள் பிரதமர் நேருஜி வழங்கியதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

உத்திரப் பிரதேச மற்றும் மாகாராஷ்டி மாநில அரசுகள் இந்தி மொழியில் மட்டுமே இனி சகல அரசகருமங்களையும் நடத்துவது என்று தீர்மானித்துள்ளன. (எ)

## VACANCIES

We require for immediate employment in the following categories.
1. General Clerk — Male
Knowledge in typing essential
2. Sales Representative
For promotion of Sales in Office Appliances and locally manufactured steel products.
APPLY BEFORE 12th APRIL
Age between 20 to 30 years preferable
OFFICE EQUIPMENT LIMITED
Branch Office,
140, Navalar Road, Jaffna.
[C-4224]

## குமார் அச்சகம்

பருத்தித்துறை
பிளேட்டின் / சிலிண்டர் மெஷினில்
வேலை செய்யக் கூடியவர்கள் உடன் தேவை.
மற்றும்
கொம்போசிங் — மெஷின் வேலை
பழக விரும்புவோர்
தொடர்பு கொள்ளவும்:
நிர்வாகி
[3224]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி
அந்தியேட்டி அழைப்பு நன்றிநவிலல்



**திருமதி ருக்மணி சின்னராசா**
பிறப்பு: 14 - 03 - 1929
இறப்பு: 07 - 03 - 1990

அன்பின் தாயோ
அணையாத சுடர் விளக்கோ
பாசத்தின் திரு உருவே
31 நாட்கள் சென்றாலும்
எம் மனதில் அணையாமல்
சுடர் விடும் தாயோ
உன் பிரிவை தாங்க முடியாமல் தவிக்கும்
பிள்ளைகள் — கௌரி, சிறி, சங்கர்,
தாய், அன்புச் சகோதரங்கள்,
மைத்துனர்மார், பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள், நண்பர்கள்.

ஸ்ரீ
787, நேரக்காப்பாளர்,
சங்கானை.
[3126]

## முதலாம் வருட நினைவஞ்சலி



**அமரர் வைரவி கந்தையா**
மலர்வு: 12 - 05 - 1941
உதிர்வு: 18 - 03 - 1989
திதி: 06 — 04 — 1990

ஆண்டொன்று ஆனாலும்
அகத்தே நின் நிழல் வதனம்
மூண்டெரியும் மூளாத் தீ
உன் கனலும் காவியமாய்
ஈண்டெம்மை ஏன் பிரிந்தீர்
எமதருமை தலைவா நீ
மாண்ட நாள் முதலாகத்துயில்
மூழ்கிக் கிடந்தழுகின்றோமே!

அன்பு மனைவி பவளம்,
பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.
மயிலணி வடக்கு,
சுன்னாகம்.
[12277]

## அந்தியேட்டி அழைப்பு



**திருமதி பொன்னம்மா சுப்பையா**
தோற்றம்: 08 06-1920
மறைவு: 08 03-1990

எங்கள்குடும்பத்தலைவி திருமதி பொன்னம்மா சுப்பையா அவர்களது அந்தியேட்டிக்கிரியைகள் 07 - 04 - 1990 சனிக்கிழமை குரும்பசிட்டி கிழக்கில் உள்ள எமது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் இடம் பெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
குடும்பத்தினர்.
குரும்பசிட்டி கிழக்கு,
தெல்லிப்பழை.
30-03-90 [3136]

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி கனகம்மா விசுவலிங்கம்**
தோற்றம்: 05 - 07 - 1905
மறைவு: 23 - 03 - 1986
திதி: 06 — 04 — 1990

அன்பு அம்மா! எத்தனை கோடி ஆண்டுகள் சென்றாலும் எங்கள் உள்ளத்தில் ஒளி வீசும் உங்கள் இனிய முகம் எங்கள் உள்ளத்தை விட்டகலா!
உங்கள் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

வி. மகாலிங்கம்,
267, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
[3133]

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

★  ★

**திரு. ஐயம்பிள்ளை ஜெயக்குமார்**
(தொழில் நுட்பவியலாளர், உள்ளூராட்சித் திணைக்களம் முல்லைத்தீவு)
மலர்வு: 07 - 12 - 1957
உதிர்வு: 14 - 03 - 1984
திதி: 06 — 04 — 1990

அன்பு மகனே! அருமை அண்ணாவே!
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்:
அப்பா, அம்மா, தம்பிமார், தங்கை.
'உதயபவனம்'
கண்டாவளை.
(2962)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். போதனா வைத்தியசாலை

# நோயாளர் வருகை அதிகரிப்பு

# ஆனால் போதிய வசதிகள் இல்லை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

''நிலைமை சீர்அடைந்த பின்பு யாழ் - போதனா வைத்தியசாலைக்கு நோயாளர்கள் வருகை அதிகரித்துள்ளது. ஆனால்வசதிகள் தான் இன்னும் குறைவாகவுள்ளன''

இப்படிக் கூறுகிறார் யாழ்-போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி. பு. சண்முகம்.

இந்த வைத்தியசாலையில் 1015 படுக்கை வசதிகளே உள்ளன. கடந்த காலங்களில் ஒரே நேரத்தில் 800 பேரே சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுவந்தனர் ஆனால் தற்சமயம் ஆயிரத்துக்கு மேல் நோயாளிகள் அனுமதிக்கப் படுகிறார்கள்.

அதே நேரம் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவிலும்-வழமையை விட கூடுதலான அளவு நோயாளிகள் வந்து போகின்றார்கள்.

இந்த நிலையில் வைத்தியர்கள் பற்றாக்குறை உள்ள போதும் கடமையாற்றும் வைத்தியர்கள் நல்ல கவனமாக கடமையுணர்வுடன் செயல்பட்டு வருகின்றார்கள்.

மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு இல்லாத போதும், பல வசதியீனங்கள் உள்ளன.

இப்படி அவர் கூறினார். (இ-3)

## வானொலி நிகழ்ச்சிகள்

6- 4 - 1990

| | |
|---|---|
| 5.00 | நாதாஞ்சலி |
| 5.05 | திருமுறைப்பாடல்கள் |
| 5.30 | பாமாலை |
| 5.45 | சைவ நற்சிந்தனை |
| 5.50 | இஸ்லாமிய நற்சிந்தனை |
| 5.55 | போதி மாதவனின் போதனைகள் |
| 6.00 | வர்த்தக சேவை |
| 6.30 | செய்திகள் |
| 6.40 | செய்தித்தாள் கண்ணோட்டம் |
| 7.00 | வர்த்தக சேவை |
| 7.45 | மாகாணச் செய்திகள் |
| 7.50 | வர்த்தக சேவை |
| 8.00 | வாத்திய மஞ்சரி |
| 8.15 | மெல்லிசைப் பாடல்கள் |
| 8.30 | உறுது மஞ்சரி |
| 9.00 | வர்த்தக சேவை |
| 10.00 | இசையமுதம் |
| 10.30 | பக்தி மஞ்சரி |
| 11.00 | நாதஸ்வரம் |
| 12.00 | வர்த்தக சேவை |
| 12.45 | செய்திகள் |
| 12.55 | அறிவிப்புகள் |
| 1.00 | வர்த்தக சேவை |
| 6.00 | செய்திகள் |
| 6.15 | இப்தார் விசேட நிகழ்ச்சி |
| 6.30 | திருவாசகம் |
| 7.00 | முஸ்லிம் நிகழ்ச்சிகள் |
| 7.55 | உலகச் செய்திகள் |
| 8.00 | துதிப் பாடற் பயிற்சி |
| 8.15 | களத்துமேடு |
| 8.30 | விவசாய நாடகம் |
| 8.45 | மெல்லிசைப் பாடல்கள் |
| 9.00 | செய்திகள் |
| 9.20 | பக்திப் பாடல்கள் |
| 9.30 | செந்தமிழ் வளர்த்த செம்மல்கள் |
| 9.45 | கதாப் பிரசங்கம் |
| 10.00 | நினைவில் நிறைந்தவை |
| 11.00 | ஒலிபரப்பு முடிவு. |

ராஜீவ் தாக்கியவரை விடுவிப்பு:

## இந்தியத் தூதருக்கு திருப்தி இல்லையாம்!

கொழும்பு ஏப்ரல் 6

ராஜீவ் காந்தியைத் தாக்கியதற்காக சிறை வைக்கப் பட்டிருந்த இலங்கைக் கடற்படை வீரர் ரோஹன டி சில்வாவை பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப் பட்டது குறித்து கொழும்பில் உள்ள இந்திய தூதர் எஸ். எல். மெஹ்ரோத்ரா கவலை தெரிவித்தார்.

சிறைக் கைதிகளுக்கு பொது மன்னிப்பு அளிக்கும் உரிமை ஜனாதிபதிக்கு உண்டு. இது ஓர் உள்நாட்டு விவகாரம்.

''தண்டனை முடிவதற்கு முன்னரே ரோஹனாவை விடுதலை செய்ததை குறித்து நான் மகிழ்ச்சியடைய முடியாதுள்ளது''—

இப்படி திரு. மெஹ்ரோத்ரா அறிக்கை ஒன்றில் தெரிவித்தார் என்று ஏ. எப். பி செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது. (உ-எ)

## இந்தியாவின் கவலையை அரசு கவனத்திற்குஎடுக்காதாம்

கொழும்பு, ஏப்ர 6

முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியைத் தாக்கிய இலங்கை கடற்படை வீரரை விடுதலை செய்த சம்பவம் குறித்து இந்தியா தெரிவித்த கவலையை இலங்கை அரசு கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாது.

— இப்படி அமைச்சரவைப் பேச்சாளர் ரஞ்சன் விஜேரத்தினா நேற்று செய்தியாளரிடம் தெரிவித்தார். (ஓ-எ)

## ஜே. வி. பி. மொனறாகலை தலைவர் சுட்டுக் கொலை

கொழும்பு, ஏப். 6

ஜே. வி. பி.யின் மொனறாகலைப் பகுதித் தலைவர் 'சிட்ஹிசோமா' என்பவர் கடந்த செவ்வாய்க்கிழமை அரசுத் துருப்புக்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

எதசடுவ காட்டுப்பகுதியில் நடத்தப்பட்ட தேடுதல் வேட்டையின்போது இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

21 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டனர். இந்திய சீன மற்ற சோவியத் தயாரிப்புக்களான ரைபிள்கள் மற்றும் ரவைகள், வெடிமருந்துகள் அப்போது கைப்பற்றப் பட்டன.

லொறி ஒன்றும், 5 மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டன என்று இராணுவப் பேச்சாளர் ஒருவர் சொன்னார். (இ-எ)

### புலிகள்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ருக்க முடியும்—

விடுதலைப் புலிகளும் ஆயுதங்களை வைத்திருக்க முடியாது. அவர்களும் கட்டாயம் ஆயுதங்களைக் கைவிட வேண்டும். இது குறித்து ஜனாதிபதி பிரேமதாஸா உரிய முறையில், உரிய வழியில், உரிய நேரத்தில் நடவடிக்கை எடுப்பார்.

★ தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினருடன் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும். அதிமு அவசரப்படுவதற்கு ஒன்றுமில்லை.

★ மோதல் மூலம் அல்லாமல் பேச்சுவார்த்தைகள் மூலமே பிரச்சினைகளைத் தீர்க்க அரசு விரும்புகிறது.

★ இந்தியாவுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டுமன்ன. வேறு எவருமிகூடப் பேசலாம் ஆனால் எமைப் பற்றி பேசுகிறார்கள் என்பதே கவனிக்கப்பட வேண்டியது (அ-எ)

### முறைகேடு---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வந்தால், முதலில் இதற்கு பொறுப்பாகவிருந்த அதிகாரியுடன் கதைத்து, தேவை ஏற்படின் ஐவர் கொண்ட குழு மூலம் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்தக் குழுவில் உதவி அரசாங்க அதிபர், ஆசிரியர் சங்கப் பிரதிநிதி, பழையமாணவர் சங்கப் பிரதிநிதி, கல்வி அதிகாரி ஆகியோர் இடம் பெறுவர்.

இந்த குழு சீர்கேடு இருப்பதாகச் சிபார்சு செய்தால் கல்விச் சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்துக்கு அது விடப்படும்.

இப்படி அவர் கூறினார். (இ-3)

### பட்டிமன்றம்

சுன்னாகம் ஏப்ரல் 6

சுன்னாகம் ஐயனார் கோவிலில் இன்று வெள்ளி இரவு 7 மணியளவில் திரு. இ. ஜெயராஜ் தலைமையில் பட்டிமன்றம் நடைபெறும். (இ)

### சந்திரிக்கா திரும்பினார்

கொழும்பு ஏப்ரல் 6

திருமதி சந்திரிக்கா குமாரணதுங்கா தாயகம் திரும்பி விட்டார் என்று தெரிய வருகிறது.

அவரது கணவரான ஸ்ரீ லங்கா மக்கள் கட்சியின் முன்னாள் தலைவர் விஜய குமாரணதுங்கா கொல்லப் பட்டதைத் தொடர்ந்து திருமதி குமாரணதுங்கா குழந்தைகளுடன் லண்டன் சென்றிருந்தார்.

### சாவகச்சேரி ஆஸ்பத்திரி துப்பரவு

யாழ்ப்பாணம் மார்ச் 6

சாவகச்சேரி அரசினர் ஆஸ்பத்திரியை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் நேற்று துப்பரவு செய்தனர்.

ஆஸ்பத்திரி வளவினுள் செடி, கொடிகளும், பற்றைகளும் நிறைந்து காணப்பட்டன. நீண்ட காலமாக இந்நிலை தொடர்ந்தது.

அதை அடுத்தே விடுதலைப் புலிகள் இந்த முன் மாதிரியான செயலில் இறங்கினர். பொதுமக்கள் இச்செயலை பெரிதும் பாராட்டினர். (ஒ)

### எழுத்தாளர் டானியல் நினைவுக் கூட்டம்

மறைந்த எழுத்தாளர் கே. டானியலின் நினைவுக் கூட்டம் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. எஸ். சிவலிங்கராஜா தலைமை வகுக்கும் இக் கூட்டத்தில் 'சொக்கன்', சச்சி மாஸ்ரர், கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர், திரு. கே. தங்கவடிவேல், திரு. எம். ஏ. சி. இக்பால், திரு. த. கலாமணி, திரு டானியல் அன்ரனி, திரு. கே. ரி. இளங்கோவன், செல்வி. தாரகா டானியல் ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்துவார்கள்.

கவிஞர் எஸ். ஜி. கணேசவேல், கவிஞர் நல்லை அமிழ்தன் ஆகியோர் கவிதாஞ்சலி செய்வார்கள். திரு. பொன். பொன்ராஜா வரவேற்புரையையும் திரு. தேவி பரமலிங்கம் நன்றியுரையையும் கூறுவார்கள். (க)

### தமிழீழ---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு நிதர்சனம் தொலைக்காட்சி சேவையின் பொறுப்பாளர் திரு. இ. பரதன் தெரிவித்தார்.

இந்தச் சேவையினை மீண்டும் ஆரம்பிப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் நேற்றுப் பிற்பகல் திரு. சி. கா. சதாசிவம் தலைமையில் நிதர்சனம் ஒளிபரப்புச் சேவை நிலையத்தில் நடைபெற்றது.

திரு. பரதன் அங்கு மேலும் கூறியதாவது:-

முன்னைய காலங்களில் பல்வேறு காரணங்களுக்காக எமது சேவையில் முழுமையான பங்களிப்பினைச் செய்ய கலைஞர்கள் முன்வரவில்லை. ஆனால் தற்போது எந்தப் பிரச்சினையோ பயமோ இல்லை. ஆதலால் கூடியளவு பங்களிப்பினை கலைஞர்கள் தந்து எமது தொலைக்காட்சிச் சேவையை வளர்க்க உதவுவார்கள் என நம்புகின்றேன்.

நிதர்சனம்ஒளிபரப்புச்சேவை ஏனைய ஒளிபரப்புச்சேவைகளை விட தரமானது என்ற நிலையை ஏற்படுத்துவது கலைஞர்கள் ஆர்வலர்களின் பங்களிப்பிலேயே தங்கியுள்ளது.

'நிதர்சனம்' ஒளிபரப்புச் சேவையைத் திறமையாக நடத்துவதற்கான ஆலோசனைகளைத் தபால்மூலமோ அல்லது நேரடியாகவோ எமக்கு வழங்கலாம் — என்றார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலைஞர்கள், கல்விமான்கள், ஆர்வலர்கள் பல [illegible] துறைகளையும் ஆலோசனை [illegible]

# ஜனாதிபதிக்கும் அமைச்சர்களுக்கும் இடையில் பிளவை ஏற்படுத்த முயற்சியாம்!

## பத்திரிகையாளர் எதைக் கேட்டாலும் பதில் இடைக்கும்

கொழும்பு, ஏப். 6

வெகுசனத்தொடர்பு சாதனங்களுடன் அமைச்சரவை எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதுபற்றி சகல அமைச்சர்களுக்கும் ஜனாதிபதி விளக்கியிருக்கிறார்.

இத்தகவலை அமைச்சரவைப் பேச்சாளரான திரு. ரஞ்சன் விஜேரத்னா நேற்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அவர் இதுகுறித்து மேலும் கூறியதாவது:-

பத்திரிகையாளர்கள் எல்விதமாகவும் வினாக்களைக் கேட்கலாம். அவற்றுக்கான பதில்கள் மற்றும்விளக்கங்கள் தரப்படும்.

அமைச்சரவை சம்பந்தமாக அவதூறுகட்டுரைகளை வெளியிடும் பத்திரிகைகள்மீது நடவடிக்கை எடுக்கப் புதியசட்டம் கொண்டுவரப்படமாட்டாது; தற்போதைய சட்டங்களே போதும்'-

ஜனாதிபதிக்கும் அமைச்சர்களுக்கும் இடையில் பிளவை ஏற்படுத்த சில விஷமிகள் முயல்கிறார்கள். அமைச்சரவைக் கூட்டத்தில் நடப்பவற்றைத் தவறாகச் சில பத்திரிகைகள் எழுதுகின்றன.

அமைச்சரவைக்கூட்டத்தில் அமைச்சர்கள் தமது கருத்துக்களைத் தெரிவிக்கச் சுதந்திரமுடையவர்கள், அவற்றைப் பிழையாக வெளியிட்டு விஷமத்தனம் புரியக்கூடாது.

அமைச்சரவைத் தகவல்களை அறிவதானால் என்னிடமோ, ஜனாதிபதியின் செயலாளரிடமோ கேட்டறிந்து கொள்ளலாம்,

பத்திரிகையாளர்கள் தன்னிச்சையாக நடந்துகொள்ள அனுமதிக்க முடியாது — என்றும் அவர் தெரிவித்தார். [அ-எ]

## அமெ, பிரெஞ்சு தூதராலய செயலாளர்கள் யாழ்நகரில்

யாழ்ப்பாணம், ஏப் 6

அமெரிக்க, பிரெஞ்சு தூதராலயங்களைச் சேர்ந்த செயலாளர்கள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

அமெரிக்க தூதராலயத்தைச் சேர்ந்த திரு. டீ. ஏ ஹரி, பிரெஞ்சு தூதராலயத்தைச் சேர்ந்த திரு.டீ.கோல்பீம் ஆகியோரே அந்த இருவருமாவர்.

இவர்கள் நேற்றுக் காலை அரசாங்க அதிபரைச் சந்தித்த பின் பல்கலைக்கழகத்திற்கும் சென்றனர். நகரில் சில பகுதிகளையும் அவர்கள் பார்வையிட்டனர். (ஒ-5)

## கல்வி அமைச்சில் தமிழ்மொழி: இராஜமனோகரியிடம் பொறுப்பு

கல்வி அமைச்சின் சகல நடவடிக்கைகளும் தமிழ் மொழியில் இடம்பெறுவதைக் கண்காணிக்கும் பொறுப்பு கல்வி துணை அமைச்சர் திருமதி. இராஜமனோகரி புலேந்திரனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திருமதி புலேந்திரன் கல்வி அமைச்சுக்கு விஜயம் செய்து தமது பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டார்.

கல்வி அமைச்சின் சகல செயற்பாடுகளும் தமிழ் மொழியில் இடம் பெறுவதை உறுதிப்படுத்தும் வேலைத் திட்டம் ஒன்றைத் தயாரித்து, அதனை அமுல் நடத்தும் பொறுப்பை அமைச்சர் லலித் அத்துலத்முதலி திருமதி புலேந்திரனிடம் ஒப்படைத்திருக்கிறார். (உ-க)

### சுன்னாகத்தில் உண்ணாவிரதம்

நேற்று வியாழக்கிழமை சுன்னாகத்தில் அன்னை பூபதி நினைவாக அடையாள உண்ணாவிரதம் ஒன்று நடத்தப்பட்டது.

சுன்னாகம் பிரதேச விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொறுப்பாளரான திரு. சிவா தலைமையில் இந்த அடையாள உண்ணாவிரதம் சுன்னாகம் கதிரமலை சிவன் கோவில் முன்றலில் நடைபெற்றது.

இதில் பெரும் எண்ணிக்கையில் பொதுமக்கள் கலந்துகொண்டார்கள்.

மாலை 4 மணியளவில் தாக சாந்தி செய்து உண்ணாவிரதம் முடிவு பெற்றது.

### சிரமதானம்

கோண்டாவில் கொட்டைக்காடு மயானம் சிரமதானம் மூலம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. கோண்டாவில் ஸ்ரீ நாராயணா சனசமூக நிலைய இளைஞர்கள் இச்சிரமதானப் பணியை மேற் கொண்டனர்.

# புது வருடத்துக்கு முன் 40 பஸ்கள் சேவையில்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் ஓடமுடியாதுள்ள 40 பஸ்கள் புதுவருடத்துக்கு முன் சேவையில் ஈடுபடும்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. சி. கனகரத்தினம் மேற்கண்ட தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

உதிரிப்பாகங்கள், டயர்கள் இன்றி 100க் கணக்கான பஸ்கள் கட்டையில் வைக்கப்பட்டுள்ளது குறித்து அவரிடம் விசாரித்த சமயம் அவர் மேலும் கூறியதாவது;

புதுவருடத்துக்குமுன் இந்த பஸ்களில் 40 பஸ்களைத் திருத்தி சேவையில் ஈடுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

புதிதாகவும், புனரமைக்கப் பட்டதுமான 300 டயர்கள் வந்து சேர்ந்துள்ளன. மேலும் 4 என்ஜின் செட்டுக்கள் இவ்வாரத்தில் வந்துசேரும். வேறு உதிரிப்பாகங்கள் வந்து சேரவுள்ளன.

இதன் மூலம் 40 பஸ்களைத் திருத்தி சேவையில் ஈடுபடுத்த முடியும்.

இப்படி அவர் கூறினார். (இ-3)

### காலை, மாலையில் வள்ளுவர் குறள்

காலை, மாலை நேரங்களில் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் திருக்குறள் ஒலிபரப் பப்படுகிறது.

தமிழக சட்டசபையில் முதலமைச்சர் கருணாநிதி இதனைத் தெரிவித்தார்.

### டெலிவிஷனில் டென்னிஸ் தொடர்

சென்னை, ஏப்ரல் 5

டென்னிஸ் விளையாட்டுப் பற்றிய தொடர் ஒன்று தூரதர்ஷனில் எதிர்வரும் ஜூன் மாதம் ஒளிபரப்பாகும்.

இத்தொடர் 13 அத்தியாயங்களைக் கொண்டது ஆகும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இத்தொடரை பிரபல டென்னிஸ் வீரர் விஜய் அமிர்தராஜ் தயாரித்து வருகிறார். (எ)

### பயிலுநர்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவே பயிற்சியாளர்களுக்கு பண்டிகை முற்பணம் வழங்க முடியாது.

கல்வி, உயர்கல்வி அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

அமைச்சர் இது குறித்து மேலும் கூறியதாவது:-

அப்படியே அவர்களுக்கு புத்தாண்டு கொடுப்பனவு வழங்கப்படுவதானாலும் 4 கோடி 50 லட்சம் ரூபா தேவைப்படும். அதற்குத் திறைசேரியில் வசதியில்லை. திறைசேரி அங்கீகரிக்கவும் மாட்டாது — என்றார். (உ-ஒ-2)

அறிமுகப்படுத்துகிறோம்!

Document Preparation Using Modern Computer Technology

★ LETTERS
★ PROJECT REPORTS (Column wise printing)
★ FRONT PAGE DESIGN (Including Tamil Letters)
★ INSTRUCTION NOTICES
★ வெளிநாடுகளுக்கு உத்தியோகபூர்வ கடிதங்கள் அறிக்கைகள், விண்ணப்பங்கள் அனுப்புபவர்களுக்கு மிகவும் உகந்தது.
★ மூலப் பிரதியைப் போல எத்தனை பிரதிகளும் எடுக்கலாம்.
★ ஆவணங்கள் எல்லாம் கம்பியூட்டர் மூலம் சரி பார்க்கப்படும். (Spelling Checking)
★ தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் பிழைகள் ஏதும் காணப்படின் மிகவும் குறுகிய நேரத்தில் புதிய பிரதி அடித்து தரப்படும்.

வரைபுகள் (Graphs) தயாரித்து கொடுக்கப் கப்படும். Stencil தயாரித்துக் கொடுக்கபபடும்

இவற்றுடன் எம்மிடம் Verbatim Floppy discs (2D, 2S), Epson Printer ribbon, Printer Stationary ஆகியன விற்பனைக்குண்டு.




UNIKCO COMPUTER CENTRE
No. 5, Power House Road, 2nd Lane, JAFFNA.
[சி-4247]

தமிழினத்தின் தன்னிகரில்லா தனிப் பேரொளி

அன்னை பூபதிக்கு எமது அஞ்சலிகள்

திருக்கேதீஸ்வரம் சி. க. கூ. சங்கம், திருக்கேதீச்சரம் இந்து இளைஞர் மன்றம், திருக்கேதீச்சரம் சனசமூக நிலையம், திருக்கேதீச்சரம் கிராம அபிவிருத்திச் சங்கம், சேர் கந்தையா வைத்தியநாதன் விளையாட்டுக்கழகம், திருக்கேதீஸ்வரம். (12162)

இப்போது விற்பனையாகிறது!

ஜோதிட ஜோதி

முன்வினை - முயற்சி - திருவருள்

பங்குனி மாத இதழ் எங்கும் கிடைக்கும்

✶ புத்திர பாக்கியம் இல்லாமல் போவது ஏன்?
— தோஷம் நீங்க என்ன செய்ய வேண்டும்.

✶ வீடு கட்டப் போகிறீர்களா?
— அதற்கு முன் செய்யவேண்டியவை பல

✶ இடப லக்னக்காரருக்கு 7ல் சனி இருந்தால் விவாகத்தைக் கொடுக்குமா அல்லது கெடுக்குமா?
— ஜோதியின் பதிலைப் படியுங்கள்.

எண் தத்துவம், ஜோதிடம் பயில்வோம் மற்றும் வழமையான அம்சங்கள் அடங்கியது.

உங்கள் பகுதி உதயன் விற்பனை முகவர்களிடம் கேட்டு வாங்குங்கள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பாடசாலைப் பிள்ளைகளின் மதிய உணவுத் திட்டத்திற்கு உகந்தது.

**" ஜீவாகாரம் "**

இதில் தேவையான அளவு கலோரி, புரதம், விற்றமின், தாதுப்பொருட்கள் அடங்கி உள்ளது.

அண்ணா தொழிலகம்
இணுவில்.



# உதயன்

06 - 04 - 1990 வெள்ளிக்கிழமை



15 கிறாம்

**அண்ணா கோப்பி**

100 விதம் சுத்தமானது

இது கைதேர்ந்த தொழிலாளர்களினால் காற்றுப் புகாவண்ணம் அடைக்கப்பட்ட பைக்கட்டுகளில் வெளிவருகிறது இதை வாங்கிப் பாவித்து

இதன் வெற்றுப் பைக்கட்டுகள் 25 கொடுத்து ஒரு அப்பியாசக்கொப்பியை இனாமாகப் பெற்றுக் கொள்ளவும்.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி எலிசபெத் ஞானம்மா அருட்பிரகாசம்

திருமதி எலிசபெத் ஞானம்மா அருட்பிரகாசம் 05-04-1990 அன்று தனது 90 ஆவது வயதில் மகிமைக்குள் பிரவேசித்தார்.

இவர் காலம்சென்ற முதலியார் ஜோன் அருட்பிரகாசத்தின் அன்பு மனைவியும், றொபேட் (காலம் சென்ற), ஹென்றி, ஜோர்ச், சாமுவேல் (U.K), தேவராணி, கிறிஸ்மி ஆகியோரின் அன்புத் தாயாரும், ரஞ்சி, லிடியா, ஞானசோதி, இந்திரா (U.K), ஞானநேசன், துரைரட்ணம் ஆகியோரின் அன்பு மாமியாரும், றொபினி, றதனி (Bahrein), றக்ஷினி, றங்கா, பிரகாஷ் (Japan), சுரேஷ் (U.K), நிமேஷ் (U S.A), திலாந்தி, வேணி (U.K), மித்திரன் (U.K), தக்ஷினி, சேயன், தயாளினி, சஜனி, சுகித்தினி, நிசாந்தன் ஆகியோரின் அன்புப் பாட்டியாரும், றோஷினி, நெயோமி ஆகியோரின் அன்புப் பூட்டியாரும், திரு. S. T. குணரத்தினம் (U.S.A) அவர்களின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 07-04-1990 சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு இல. 10, சோமசுந்தரம் அவனியுவில் நடைபெற்று, பூதவுடல் இலங்கை பெந்தேகோஸ்த்தே சபை (துண்டி) சேமக்காலைக்கு மாலை 4-00 மணிக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
V. K. R. துரைரட்ணம்

யாழ். அரிசி ஆலை,
மானிப்பாய்.
[12163]

### செல்லையா சச்சிதானந்தசிவம்

சரவணையூர் செல்லையா சச்சிதானந்தசிவம் 2 - 4 - 90 ஞாயிற்றுக்கிழமை காலை காலமானார்.

இவர் இளைப்பாறிய தாபலதிபரும், பிரபல சட்டத்தரணியும் அகில இலங்கை இந்துமாமன்றம், யாழ் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் செயலாளரும், தயாநிதியின் அன்புக் கணவரும், பத்மஜா (ஆசிரியை கொட்டாஞ்சேனை தமிழ் வித்தியாலயம்) திருமாவளவன் மிருணாளினி, கரிகால் வளவன், தயாளினி, அனபாயவளவன் ஆகியோரின் அன்புத் தந்தையும் அமுதவல்லி, அமுதசுரபி காலஞ்சென்ற கருணானந்தசிவம் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற பசுபதிப்பிள்ளை, விஸ்வலிங்கம் காலஞ்சென்ற கலாநிதி, திருமதி சாந்தினி பழநிவேற்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும் பழநிவேற்பிள்ளையின் சகலனும் ஆவர்.

அன்னாரது பூதவுடல் ஈமக்கிரியைக்கா அவரது கொழும்பு இல்லத்திலிருந்து 8-4-90 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணியளவில் கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சச்சிதானந்தசிவம் குடும்பத்தினர்

20, மீரானிய வீதி,
கொழும்பு - 12.
(3137)

### நாகரத்தினம் (பொன்னம்மா)

புலோலி தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலுப்பிள்ளை வாரித்தம்பி (பொன்னையா) யின் அன்பு மனைவி நாகரத்தினம் (பொன்னம்மா) 03-04-1990 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற கந்தசாமி, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், கந்தையா, தங்கம்மா, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியும், சுந்தரலிங்கம் (உதவி ஆணையாளர், கமநல சேவை திணைக்களம், வவுனியா), காலஞ்சென்ற கமலாதேவி, காலஞ்சென்ற லோகாம்பாள், இந்திராதேவி, சகுந்தலாதேவி, உதயலிங்கம் (லங்கா மெசின் லீசர்ஸ்), சாந்தலிங்கம் (பொறியியலாளர், லண்டன்), கணேசலிங்கம் (லண்டன்), பஞ்சலிங்கம் (லண்டன்), தயாபரதேவி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்லத்துரை (லண்டன்), கனகரட்ணம் (Assessor, உள்நாட்டு இறைவரித் திணைக்களம்), லோகநாயகி, உலகநாதன் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா), இராஜகுமாரி, விமலாதேவி (லண்டன்), இராசாத்தி, கீதா (லண்டன்), அருள்ராஜா, கிருஷ்ணபவான் (சவுதி அரேபியா), அநந்தவம் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும், பாலகிருஷ்ணன், சரோஜினிதேவி ஆகியோரின் பெரிய தாயாரும், பானுதேவா (லண்டன்), பானுமதி, ஜெயதேவா (லண்டன்), கல்யாணி, சுந்தரராஜா, கனகராஜா (லண்டன்), சுந்தரராணி காசிநாதன் (அவுஸ்திரேலியா), சுந்தரகுமார், சுந்தரமூர்த்தி, நகுலதேவா காயத்திரி, சுந்தரமோகன், மீரா (அவுஸ்திரேலியா), சுதர்சன், ரகுசாந் (லண்டன்), ராதிகா, சுமதி (லண்டன்), ராகவன், கார்த்திகா, காண்டீபன், உஷா (அவுஸ்திரேலியா), தீபா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 09-04-1990 திங்கட்கிழமை காலை 11 மணிக்கு துன்னாலை ஓடைக்காடு மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுந்தரலிங்கம்
(உதவி ஆணையாளர்)

சோளியவத்தை,
புலோலி தெற்கு,
புலோலி.
[3143]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர்வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 06 - 04 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


# இலங்கை வங்கிக் கிளைகளில் ரூ.1000, ரூ.4000 கொடுப்பனவு

## 7 ஆம் 8 ஆம் 9 ஆம் திகதிளில்

யாழ்ப்பாணம், ஏப். 6

ரூ. 1000 நிவாரணக் கொடுப்பனவும், ரூபா 4000 உற்பத்தித்திறன் கொடுப்பனவும் எதிர்வரும் 7 ஆம், 8 ஆம், 9 ஆம் திகதிகளில் குறிப்பிட்ட கிளைகளில் வழங்குவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இலங்கைவங்கி சாவகச்சேரிக் கிளையிலும், மானிப்பாய்க் கிளையிலும் கொடுப்பனவுகள் இல்லாத காரணத்தால் அக்கிளைகளுக்குரிய கொடுப்பனவுகள் இலங்கை வங்கி ஆஸ்பத்திரிக் கிளையில் வழங்குவதற்கான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

### 7-4-90

**பருத்தித்துறை வங்கிக் கிளை**
பொலிகண்டி கிழக்கு, பெருடாவில் தெற்கு,

**யாழ். 2ஆம் கிளை**
J/59

**சாவகச்சேரிக் கிளை**
உசன், மீசாலை தெற்கு, சரசாலை, இடைக்குறிச்சி, உசன், தாவளை, இயற்றாளை, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி நகரம், நாவற்குழி, மறவம்புலோ, கொயிலாக்கண்டி, கச்சாய், மட்டுவில் தெற்கு, அல்லாரை, வரணி வடக்கு, கரம்பைக்குறிச்சி, மட்டுவில் வடக்கு, கைதடி கிழக்கு, கைதடி மத்தி.

**மானிப்பாய்க்கிளை**
ஆனைக்கோட்டை.

**நெல்லியடிக்கிளை**
இமையாணன்.

**காங்கேசன் கிளை**
கட்டுவன், வீமன்காமம்.

### 8-4-90

**பருத்தித்துறைக் கிளை**
மந்திகை, சுண்டிக்குளம், கற்கோவளம்.

**யாழ். ஸ்ரான்லிக்கிளை**
J/49, J/51, J/55, J/56, J/57, J/5?, J/60, J/50.

**சாவகச்சேரிக்கிளை**
விடத்தற்பளை, தவசிக்குளம், கொடிகாமம், வரணி இயற்றாளை, கச்சாய், மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி வடக்கு, நாவற்காடு, மறவன்புலோ, நாவற்குழி, கைதடி நுணாவில், சாவகச்சேரி நகரம், தனங்கிளப்பு, நுணாவில் மேற்கு, மட்டுவில் தெற்கு.

**மானிப்பாய்க்கிளை**
உயரப்புலம்.

**நெல்லியடிக் கிளை**
கரவெட்டி வடக்கு.

### 9-4-90

**பருத்தித்துறைக் கிளை**
பருத்தித்துறை கிழக்கு, குடத்தனை கரையூர், அல்வாய் வடக்கு.

**காங்கேசன்கிளை**
அளவெட்டி கிழக்கு, மல்லாகம்.

**மானிப்பாய்கிளை**
மாகியப்பிட்டி, சங்கானை வடக்கு, சில்லாலை.

**நெல்லியடிகிளை**
அல்வாய் தெற்கு. (இ)

# பிரதான வீதி மக்கள் வங்கியில் ரூபா நாலாயிரம் நிவாரணம்

## ஞாயிறன்று வழங்கப்படும்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

மக்கள் வங்கியின் யாழ் பிரதான வீதிக் கிளையில் நாளை மறுதினம் ஞாயிறுக்கிழமை தொழில் முயற்சிக்கான நிவாரணப்பணமான ரூபா நாலாயிரம் வழங்கப்பட இருக்கிறது.

இந்தக் கொடுப்பனவு காலை 8. 30 மணிமுதல் பிற்பகல் 1. 30 மணிவரையே வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நிவாரணம் வழங்கப்படவுள்ள கிராம சேவையாளர் பிரிவுகள் வருமாறு:

- ★ காரைநகர் மத்தி (J/ 27)
- ★ காரைநகர் கிழக்கு (J/ 24)
- ★ காரைநகர் தெற்கு (J/25)
- ★ நாரந்தனை (J/22)
- ★ எழுவைதீவு (J/31)
- ★ சுருவுல் (J/34)

இதேவேளையில் கரவெட்டி உ. அ. அ. பிரிவு, காரைநகர் உ. அ. அ. பிரிவுகளிலுள்ளோர் ஏற்கனவே குறித்த திகதியில் நிவாரணப் பணத்தை பெறத் தவறியிருந்தால் அவர்களுக்கும் அன்று கொடுப்பனவு வழங்கப்படும் என்றும்—

சம்பந்தப்பட்டவர்கள் அவ்வப்பகுதி கிராம சேவையாளருடன் தொடர்பு கொண்டு வங்கிப் பதிவு இலக்கத்தைப் பெற்று வருமாறும் வங்கி நிர்வாகம் அறிவித்துள்ளது. (ஒ)

# ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கியில்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

உடுவில் உதவி அரசஅதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கான இரண்டாம்கட்ட மீளக்குடியமர்தல் நிவாரணம் சனி, ஞாயிறு, திங்கட்கிழமைகளில் வழங்கப்பட உள்ளது.

சனிக்கிழமை ஏழாலைதெற்கைச் (J/99) சேர்ந்தவர்களுக்கும், ஞாயிற்றுக்கிழமை ஏழாலை மேற்கைச் (J/97) சேர்ந்தவர்களுக்கும் போயா தினமான திங்கட்கிழமை புன்னாலைக்கட்டுவனைச் (J/100) சேர்ந்தவர்களுக்கும் இந்த நிவாரணப்பணமான ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

ஏற்கனவே நிவாரணப் பணத்தைப் பெறத் தவறிய வேறு பகுதிகளைச்சேர்ந்தவர்களும் இத்தினங்களில்கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# சைக்கிளில் சமாந்தரமாக செல்வதைத் தவிருங்கள்

## கல்விப் பணிப்பாளர் புத்திமதி

யாழ்ப்பாணம் ஏப்ரல் 6

வீதிகளில் போக்கு வரத்துக்கு இடைஞ்சலாக சமாந்தரமாக சைக்கிள்களில் செல்வதை மாணவ மாணவிகள் தவிர்க்க வேண்டும்.

இப்படியான ஆலோசனை ஒன்றை யாழ். மாவட்டகல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் விடுத்துள்ளார்.

இந்த விடயத்தில் ஆசிரியர்களும், அதிபர்களும் முன்மாதிரியாகத் திகழ்வதுடன், இளம்பராயத்தினருக்கு புத்திமதி கூற வேண்டும். அத்துடன் இவர்கள் குறித்து அதிபர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார். (இ-3)

# முல்லைத்தீவு அடகு நகைகள் இன்று மீளளிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஏப். 6

முல்லைத்தீவு மாவட்டத்தில் அடகு நகைகள் இன்று வெள்ளிக்கிழமை மீளளிக்கப்பட இருக்கின்றன.

முதலாம் கட்டமாக முல்லைத்தீவுக் கிளையில் 21-9-89 வரை பணம் செலுத்தியவர்களது நகைகளே இன்று மீளளிக்கப்பட இருக்கின்றன.

முல்லைத்தீவுக் கிளையின் இரண்டாம்கட்ட நகைகளும், மாங்குளம் கிளை நகைகளும் இம்மாதம் 2ஆம், 3ஆம் கிழமைகளில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-31)

# இம்முறை மேதினஊர்வலம் ஐ. தே. கவும் நடத்தும்!

கொழும்பு, ஏப்ரல் 6

வழமைக்கு மாறாக இம்முறை ஐக்கிய தேசியக்கட்சியும் பிரமாண்டமான மேதின ஊர்வலம் ஒன்றை நடத்தத் தீர்மானித்து உள்ளது.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் ஆலோசனை மீது இந்த முடிவு எடுக்கப்[illegible]

இதற்காக அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா [illegible] விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

1977 இல் ஐக்கிய தேசியக் கட்சி பதவிக்கு வந்த பின்னர் கடந்த மேதினம் வரை பொதுக்கூட்டங்களும், கலை நிகழ்ச்சிகளும் மட்டுமே நடத்தப்பட்டு வந்தன.

[illegible] யும் நடத்தவில்லை என்பது [illegible] (இ-?)

# கூட்டுறவு அபிவிருத்தி கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 6

யாழ்-மாவட்டத்தில் கூட்டுறவு அபிவிருத்தி பற்றிய கலந்துரையாடல் ஒன்றை தமிழீழ விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி எதிர்வரும் ஒன்பதாம் திகதி ஏற்பாடு செய்துள்ளது.

யாழ் மனோகரா தியேட்டரில் நடைபெறும் இத்த கலந்துரையாடலில் ப. நோ. கூ. சங்கத் தலைவர்கள், பணிப்பாளர் சங்க உறிப்பினர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். (இ 3)

# உடுகம்பொல மீண்டும் டி.ஐ.ஜி.

கொழும்பு, ஏப். 6

திரு. பிரேமதாஸா உடுகம்பொல மீண்டும் மத்திய மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபராகப் பதவி ஏற்றார்.

அண்மையில்தான் இவர் அமெரிக்காவில் இருந்து கொழும்பு திரும்பினார். (உ-எ)

# இலங்கை வங்கி கரும பீடம்

யாழ்ப்பாணம், ஏப் 6

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய உற்சவத்தை முன்னிட்டு அங்கு ஆரம்பிக்கப் பட்டுள்ள இலங்கை வங்கியின் விசேஷ கரும பீடத்தின் இன்றைய செயற்பாடுகளை இலங்கைவங்கியின்முன்னாள் பிரதான காசாளர் திரு. கே. [illegible]லிங்கம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார். (இ)

வ. போ. ச. ஊழியருக்கு

# ரூ. 200 சம்பள உயர்வு பாக்கியுடன் வழங்கப்படுகிறது

யாழ்ப்பாணம், ஏப். 6

வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட 200 ரூபா சம்பள உயர்வு பாக்கியுடன் சேர்த்து இன்று வழங்கப்பட இருக்கிறது.

புதுவருடத்தையொட்டி இவர்களுக்கு சம்பளம் முன்கூட்டி வழங்கப்படுவதாகவும், ஜனவரி முதல் வழங்கவேண்டிய பாக்கித்தொகை 600ரூபாவும் சேர்த்து வழங்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் புதுவருடத்தையொட்டி முற்பணமாக ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. [இ-3]

# சுதந்திர வர்த்தக வலயத்தில் கடுமையான சோதனைகள்!

## சுங்கத் திணைக்களம் உஷார்!!

கொழும்பு ஏப்ரல் 6

கொழும்பு, சுதந்திர வர்த்தக வலயத்துக்கு கொண்டு வரப்படும் கொள்கலன்களையும், அங்கிருந்து எடுத்துச் செல்லப்படும் கொள்கலன்களையும் மிகக் கடுமையாகவும் அவதானமாகவும் பரிசோதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுங்கத் திணைக்களம் இதற்காக முடுக்கி விடப்பட்டுள்ளது.

இந்தக் கொள்கலன்கள் மூலம் பெரும் மோசடிச் செயல்கள் இடம்பெறுகின்றன எனக் கிடைத்த தகவல்களை அடுத்தே புதிய நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது. (ஒ)

# இறுதி அறிவித்தல்

வெளிவாரிப்பட்டப்படிப்பு கலைமாணி (B.A) விஞ்ஞானமாணி (புள்ளிவிபரவியல்) B. sc பாடநெறியை தொடர விரும்பும் மாணவர்கள் 9-4-1990 க்கு முன்னர் தங்கள் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள் - எக்காரணம் கொண்டும் பின்னர் அனுமதிகள் வழங்கப்படமாட்டாது.

**உதவிப்பதிவாளர்,**
**பட்டப்படிப்புகள் கல்லூரி**
**148/1, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்,**

(C/4248)

## மரண அறிவித்தல்கள்

### கந்தர் வேலுப்பிள்ளை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகக் கொண்டவருமான கந்தர் வேலுப்பிள்ளை காலமானார்.

இவர் அன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருமதி லட்சுமி சண்முகம், காலஞ்சென்ற சுப்பிரமணியம், காலஞ்சென்ற வல்லிபுரம், சின்னத்துரை, கணபதிப்பிள்ளை (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி சுபத்திராதேவி மாயாதிரவியம், ஈஸ்வரன் (கனடா), தர்மராஜா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. க. மாயாதிரவியம் (பொறியியலாளர் - பகரேன்), திருமதி உலகவதி ஈஸ்வரன் (கனடா), திருமதி வசந்திமாலா தர்மராஜா (கனடா) ஆகியோரின் மாமனாரும், செல்வி பிறேமலதா (மருத்துவ பீடம் - யாழ்.பல்கலைக்கழகம்), பிரதீபன் (பொறியியல் பீடம் - பேராதனைப் பல்கலைக்கழகம்), காந்தீபன் (நோர்வே), ஜெயதீபன், நிமலதீபன் (யாழ். இந்துக் கல்லூரி), துஷ்யந்தினி (கனடா), பிரியந்தினி (கனடா), சாருஜா, சிந்துஜா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் சனிக்கிழமை (07-04-1990) காலை 10-00 மணிக்கு இல. 569, K.K.S. வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள், சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாஜ உறுப்பினர்களும் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
க. மாயாதிரவியம்
(மருமகன்)

870, K. K. S. Road,
Jaffna.
[3142]

### திரு. இ. இராஜமுத்தையா

ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் இ. இராஜமுத்தையா 05-04-1990 அன்று காலமானார்.

இவர் இராசம்மாவின் அன்புக் கணவரும், யோகாம்பாள் (U.K), யோகலீலா, தயாபரன் (U.K), தவபாலன் (அவுஸ்திரேலியா), தர்மராஜா (அவுஸ்திரேலியா), புவனேந்திரன் (அவுஸ்திரேலியா), அருளேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தங்கேஸ்வரன் (U.K), காலஞ்சென்ற சுவாமிநாதன், வசந்தமலர் (U.K), கிரிஜா (அவுஸ்திரேலியா), வடிவுடைநாயகி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும், முகுந்தன் (U.K), வேந்தன் (U.K), சுகந்தினி, சுகந்தன், கவிதா, வினோதன், பிருந்தா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;
மனைவி, பிள்ளைகள்

'முருகன் வீதி'
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.
[12164]


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org